உலக அமைதி மனித முயற்சியில் சாத்தியமே என்பதை அறிவிக்கவே ஐ.நா. சபை தோற்றுவிக்கப் பட்டது. ஆயினும், சென்ற ஐம்பது ஆண்டுகளில் இருபதுக்கும் மேற்பட்ட பிரச்சனைகளில் அச்சபை நடவடிக்கை எடுக்க வேண்டி வந்தது.

தீவிரவாதம் எனும் அரக்கன் நாள்தோறும் உலக நாடுகளை அச்சுறுத்தி வருகிறான். சமகால வரலாற்றில் உலக அமைதியும் தீவிரவாதமும் எதிர்மறைகளாகவே தோற்றமளிக்கின்றன.

**II. ஐ.நா. சபையின் அமைதி முயற்சிகள் :**

உலக அமைதியின் ஆணி வேராக பன்னாட்டு உறவுப் பிரச்சனைகளை அமைதி வழியில் தீர்ப்பதும், ஒட்டு மொத்தப்பாதுகாப்பு முயற்சிகளும் அமைகின்றன. ஆயினும், தலையாய உலகப் பிரச்சனைகளாக (அ) பாரசீகத்திலிருந்து சோவியத் துருப்புகள் விலகாமை (02.03.1946) (ஆ) இந்தோனேசியாவை டச்சுப் படை தாக்கியமை (ஜன.1948) (இ) லெபனான் நாட்டிலிருந்து அந்நியப்படை விலக மறுத்தல் (பிப். 1946) (ஈ) இந்தியா ஹைதராபாத் மீது படையெடுத்தல் (21.08.1949) (உ) எகிப்தில் ஆங்கிலேயப் படையின் அட்டகாசம் (1947) (ஊ) கிரீஸில் கொரில்லாப் போர் (1945) (எ) பெர்லினில் ராணுவ முற்றுகை (செப். 1948) (ஏ) டிரஸ் (1948) (ஐ) ரொடீசியா பிரச்சனை (11.11.1965) (ஒ) காஷ்மீர் பிரச்சனை (ஜுலை 1949) (ஓ) கொரியப் பிரச்சனை (25.06.1950) (ஔ) தென் ஆப்பிரிக்க இனவெறி (14.05.1949) (ஃ) பாலஸ்தீனம் (1947) (க) அராபிய இஸ்ரேல் போர் (23,05,1967) (ங) சூயஸ் பிரச்சனை (26.07.1956) (ச) சைப்ரஸ் நாட்டின் உள்நாட்டுப் போர் ஆகியவை ஐ.நா.சபைக்கு தீர்வு காண கொண்டு வரப்பட்டன.

பாதுகாப்பு சபையோ பொதுக் குழுவோ ஒவ்வொரு பிரச்சனையையும் ஆராய்ந்து தீர்வு காண முயன்று பல சமயங்களில் வெற்றியும் பெற்றுள்ளது. ஆயினும், சில சமயங்களில் உள்நாட்டு நிலைமையும் எதிர்பார்ப்பும் பிரச்சனைகளைத் திசைதிருப்பி அடிப்படை வாதத்துக்கும், அச்சுறுத்தும் தீவிரவாதத்துக்கும் இலக்காகி வந்துள்ளன. ஆங்காங்கே அரசுக்கு இணையான அதிகார மையங்களும் உருவானதுண்டு.

**III. தீவிரவாதத்தின் பன்முகங்கள் :**

பல கோர முகங்களைக் கொண்ட அரக்கத் தன்மையாக தீவிரவாதம் உருவெடுத்து வருகிறது. சிறிய கருத்து வேற்றுமையாகப் பிறப்பெடுக்கும் தீவிரவாதம் வேகமாக அமைதியையும் இணக்கத்தையும் கேள்விக் குறியாக்குகிறது. பொது வாழ்வை ஸ்தம்பிக்கச் செய்வதால் அது உலக நாடுகளின் உடனடிக் கவனத்துக்கு, மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் கொண்டு வரப்படுகின்றது.

**தீவிரவாதி என்பவன் யார் ?**

தீவிரவாதி யார் ? என்பது பற்றி பலர் பல்வேறு சூழ்நிலைகளில் பலவிதமாக விளக்கமளித்துள்ளனர்.

ஒருநிலைப்படுத்தப்பட்ட அறிவைக் கொண்டவன், மனதிலுள்ள தீய எண்ணங்களுக்கும் தீய அனுபவங்களுக்கும் மூடி போடத் தெரியாதவன் என அவன் சுட்டப்படுகிறான்.

அமுத்தி வைக்கப்பட்ட எண்ணங்களான இயலாமை, இல்லாமை, பழிவெறி ஆகியவை மெல்ல மெல்ல அவன் உள்ளத்தை ஆக்கிரமிக்கிறது. இதனால் அவனது பகுப்பாய்ந்து பார்க்கும் திறன் மழுங்கடிக்கப் படுகிறது. நல்லவையும் தீயதாகவே தெரிகின்றன. சரியாகக் கவனிக்கப்படாவிட்டால் அவன் மனம் அழிவு

சக்திக்குத் துணை போய் தீவிரவாதி என்ற திருந்த முடியாத நிலையினை அடைகின்றான். எனவே ஒரு தீவிரவாதிக்குக் கிடைக்காதவை நல்ல குடும்பம், நல்ல போதனைகள், சரியான ஒழுக்கம் மற்றும் சட்டம் பற்றிய கல்வி போன்றவையாகும்.

எளிதில் இளைஞர்களைக் கவர்ந்திழுக்கும் தீவிரவாதம் அவர்களது பின்னணிகளான, அதிகக் கட்டுப்பாடுகள் கொண்ட நெகிழ்வு இல்லாத குடும்பம் மற்றும் நல்ல சமூகக் கலாச்சாரத்து மாறான அரசியல் நிலை ஆகியவற்றால் சீரழிக்கப்படுகிறது. பெற்றோரின் அன்புக்கும் ஆதரவுக்கும் ஏங்கும் இளைஞன் பாசப் பிணைப்பைப் பெறுவதில்லை. சமூக வெறுப்பு அவனில் தலைதூக்குகிறது. அப்படிப்பட்ட இளைஞர் தீவிரவாத பிரசாரங்களின் தீய வலையில் எளிதில் விழுந்து விடுகின்றனர்.

**தீவிரவாதத்தின் வகைகள் :**

பன்முகங்கள் கொண்ட தீவிரவாதமும் சில வகைகளில் உள்ளடங்குகிறது. சமயம், எண்ண வகை, எல்லை தாண்டும் வகை, கண்டங்களை ஊடுருவும் வகை, நக்சலைட் சார்புடையவை, தனிநாடு கோரிக்கைக்கான விடுதலை முயற்சி, அரசியல் தலையீட்டுக்கு எதிரானவை மற்றும் பணயக் கைதிகளைப் பிடித்தல் என பல வகைகளில் தீவிரவாதச் செயல்கள் அடங்கும்.

தீவிரவாதத்தை அளக்க சரியான அளவுகோல் இதுவரை தட்டுப்படவில்லை. ஒவ்வொரு தீவிரவாத நிகழ்ச்சியும் ஒவ்வொரு பரிணாமத்தைக் காட்டிக் கொண்டே போகிறது. மனிதனுக்கு எதிரான பண்பற்ற செயல் என்பது மட்டும் தெளிவாகிறது. சமூகக் கட்டமைப்பையும், அமைதியான வர்த்தகத்தையும், அப்பாவிகளைத் தாக்குவதாகவும் தீவிரவாதச் செயல் அமைகிறது. மனித உரிமையை துவேஷத்தோடு நசுக்குகிறதொரு செயலாகத் தீவிரவாதம் அமைகிறது.

ஒரு தீவிரவாதச் செயலின் ஆணிவேரையும் நோக்கங்களையும் அறிவது எளிதன்று.

**IV. உலகை உலுக்கிய தீவிரவாதச் செயல்கள் :**

சென்ற நூற்றாண்டில் தீவிரவாதச் செயல்களுக்குப் பிள்ளையார் சுழி போட்ட பெருமை ஈரான் நாட்டின் மதத்தலைவரான ஆயதுல்லா கொமேனி அவர்களையே சாரும்.

தீவிரவாதத்தைப் பயங்கரவாதத்தின் மூத்த தத்துவமாகக் கொண்டால் இந்திய சுதந்திரப் போரில் திலகர் தலைமையிலான போராட்டங்களை தீவிரவாதத்தின் முதல் அத்தியாயம் எனக் கொள்ளலாம். பெர்சிவல் ஸ்பியர் அவர்கள் கருத்துப்படி எட்வர்டியன் இந்தியாவில் (1904–14) நடந்த அந்த இயக்கம் மேற்கு இந்தியாவில் பிளேக் நோய் தாக்கிய நிலையில் உதயமாயிற்று. மக்களின் உள்ளுர் மன உணர்வுகளும் மன இறுக்கங்களும் விவசாயிகளின் ஆதங்கங்களும் தீவிரவாதச் செயல்களாக வெடித்திருக்கக் கூடுமெனக் கூறலாம். அதே போல சீக்கிய மதத்தலைவரான குரு கோவிந்த் சிங் (1674–1708) தம் காலத்தில் ஏற்படுத்திய கல்சா தீவிரவாதத்தின் நிலைகளாக மாறியது. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி காலத்தில் சாந்த் பிந்திரன்வாலே காலிஸ்தான் நாடு உருவாக்க முயற்சித்தது ஒரு பயங்கரவாதத்தின் புறச் செயலேயாகும்.

முன்னர் கூறியபடி ஆயதுல்லா கொமேனி ஈரானில் மன்னர் பஹ்லவியை பதவி விலக்கம் செய்து அடிப்படை வாதத்தை பயங்கரவாதமாக மாற்றிக் காட்டினார். ஷியா பிரிவு அல்லாத முஸ்லீம்கள் ஆயிரக்கணக்கில் கொன்று குவிக்கப்பட்டனர். ஸல்மான்ரஷ்டிக்கு விதிக்கப்பட்ட தண்டனை இன்றும் அமலிலுள்ளது.

அராபிய பயங்கரவாதிகள் தங்கள் பங்குக்கு கஃபாவை 1978 நவ. 29 அன்று முற்றுகையிட்டனர்.

வளைகுடாப் பகுதியில் பயங்கரவாதம் பயங்கரவாதத்தோடு மோத வேண்டி வந்தது. பாலஸ்தீனமும், இஸ்ரேலும் பயங்கரவாதத்தில் இறங்கிய பின் மெக்ஸிகோ ஒலிம்பிக்கில் பங்கேற்ற எல்லா இஸ்ரேலிய வீரர்களும் ஈவிரக்கமின்றி 1977ல் கொல்லப்பட்டனர்.

கிறிஸ்தவ சமய பயங்கரவாதம் இங்கிலாந்தில் முப்பது வருடங்களுக்கு முன் தலைதூக்கியது. புராடஸ்டன்டுகளான ஆங்கிலேயர்கள் அயர்லாந்தில் இருந்த மக்களை வதைத்தனர். டோனிபிளேரின் முயற்சிக்குப் பிறகு அப்பிரச்சனை சமீபத்தில் முடிவுக்கு வந்தது.

சோவியத் யூனியன், ஐந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகளைப் பயங்கரவாதத்தால் நடுங்க வைத்தது. இரஷ்யா உருவான போது அது தொடர இயலவில்லை.

சீனாவில் நாட்டுப்புற விவசாயியை எவ்வாறு துன்புறுத்தினர் என்பதை டாக்டர் ஷிவாகோ என்ற திரைப்படம் தோலுரித்துக் காட்டியது. 1989–ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 3–4 நாட்களில் பெய்ஜிங் நகரின்

இதயப் பகுதியான டியானெமென் சதுக்கத்தில் சுமார் 3000 மாணவர்கள் ராணுவத்தால் கொல்லப்பட்டது. சீனாவின் பயங்கரவாதப் போக்கை உலகுக்குப் பறை சாற்றியது.

அமெரிக்காவில் எந்த பயங்கரவாதமும், தலை தூக்க முடியாது என்ற கொக்கரிப்புக்கு பதில் தரும் வகையில் உலக வர்த்தக மையம் லாஸ்ஏஞ்சல்ஸ் நகரில் பிப்.26, 1993 அன்று பயங்கரவாதிகளால் தகர்த்தெரியப்பட்டது. அமெரிக்க உளவு நிறுவனத்தின் கடுமையான விசாரணையின் விளைவாக 55 வயது நிரம்பிய குருடரான மதபோதகர் ஷேக் லுமர் அப்துல் ரகுமான் என்பவர் நைட்ரேட் வெடிமருந்தை டீசலோடு கலக்கும் போது கையும் களவுமாக ஜூன் 24-ம் நாளன்று பிடிபட்டார். முஸ்லீம் பயங்கரவாதிகள் ஐ.நா. சபையின் தலைமையிடத்தையும் தகர்க்கத் திட்டமிட்டிருந்த கொடிய செயலும் தடுக்கப்பட்டது.

இந்தோனேசியாவைத் தவிர மற்ற தென் கிழக்கு ஆசிய நாடுகளில் பயங்கரவாதம் தலைதூக்கவில்லை. இந்தோனேசியாவும் பாகிஸ்தானை ஆதரிப்பதால் பயங்கரவாத வலையில் சிக்கியுள்ளது. லத்தீன் அமெரிக்காவில் கியூபா மட்டுமே பயங்கரவாதத்தால் அல்லல் படுகிறது. தென் ஆப்பிரிக்காவில் இனவெறியும் ஜாதி வெறியுமே தலை தூக்குகிறது.

### இந்திய துணைக் கண்டம்

இந்தியத் துணைக் கண்டத்தில் இந்தியாவோடு இணைந்திருந்த எல்லா நாடுகளுமே இன்று பயங்கரவாதத்தில் சிக்கியிருப்பது வேதனை தரக்கூடிய வரலாற்று உண்மையாகும்.

பர்மாவில் அரசு சார்ந்த பயங்கரவாதம் 1948ல் அரங்கேறியது. 1988ல் நடந்த வெகுஜனப் புரட்சியில் ஜெனரல் நேவின் தூக்கி எறியப்பட்டார். தேர்தலில் சூயூகி பெரு வெற்றி பெற்ற போது பர்மிய ராணுவம் அவரை வீட்டுக்காவலில் வைத்தது. இன்றும் மியான்மரில் சகஜநிலை ஏற்படவில்லை.

இலங்கையில் சுதந்திரத்துக்கு பின் சிங்கள அரசு தமிழர்கள் மீது பயங்கரவாதத் தாக்குதலை பாயவிட்டது. இன்று விடுதலைப் புலிகள் தமிழீழத்துக்காக பயங்கரவாதம் என்ற ஆயுதத்தைக் கையிலெடுத்துள்ளனர். கொரில்லா போர்முறை பயங்கரவாதத்தின் முழு அவதாரமாக இலங்கையில் தாண்டவமாடுகிறது.

வங்காள தேசத்தில் சிட்டகாங் பகுதியில் குடியமர்ந்த சக்மா இனத்தவரை வங்காள தேச அரசு பயங்கரவாதத்தின் மூலம், கொன்று குவித்து வருகிறது. 1984 ஆண்டு வரை 85000 சக்மா இனத்தவர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 45000 பேர் இந்தியாவின் திரிபுரா மாநிலத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

பாகிஸ்தானில் முஸ்லீம் பயங்கரவாதம் கோலோச்சுகிறது. முஜாஹிர்கள் சிந்துக்களைப் பழி வாங்குகின்றனர். இந்திய வம்சாவழியினரான முஜாஹிர்களை அரசு பழிவாங்குகிறது.

இரஷ்யா ஆப்கானிஸ்தானத்தில் புகுந்தபோது பயங்கரவாதம் முஜாஹிதீன் மூலம் செயல் வடிவம் பெற்றது. அமெரிக்க உளவு நிறுவனங்களின் கணிப்புப்படி 30 முஸ்லீம் நாடுகளைச் சேர்ந்த 10000 கூலிப்படையினர் ஆப்கானிஸ்தானத்தில் பயங்கரவாதத்தை ஏவி விடுகின்றனர். அஜித் எஸ்.கோபால் என்பவர் 1993ல் கூறியதைப் போல பாகிஸ்தான் பயங்கரவாதிகளின் ஆசான் எனப் பெயர் பெற்று பதினொரு ஆண்டுகளாகின்றன. ஐ.நா.சபையோ அமெரிக்காவோ அதனைக் கட்டுப் படுத்த முடியவில்லை.

இந்தியாவில் நடக்கும், நடத்தப்படும் பயங்கரவாதம் உலகமறிந்ததே.

## V. முடிவுரை :

பயங்கரவாதத்தை ஒழிக்க முனைவோர் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் சில. ஒரு நாட்டிலோ அல்லது அதன் பகுதியிலோ பயங்கரவாதம் தோன்றினால் அதற்கு இல்லாமை, கண்டு கொள்ளப் படாமை, வறுமை, கல்வியறிவு இல்லாமை, சுயமரியாதைக்குப் பங்கம் ஏற்படுதல் போன்றவை ஏதுக்களாக அமையலாம். பயங்கரவாதத்தைச் சர்வதேச அளவிலான முயற்சிகள் மூலம் தான் ஒடுக்க முடியும். ஒரு சாராரை மகிழ்விப்பதன் மூலமோ நம்பிக்கையை வளப்படுத்தும் திட்டங்கள் மூலமோ பயங்கரவாதம் நிரந்தரமாக ஒழியாது. போப் ஆண்டவர் பொது மன்னிப்பைச் சமீபத்தில் கோரியதைப் போல மக்களை ஒடுக்கிய நாடோ அரசோ தலைவரோ பகிரங்க மன்னிப்புக்கேட்டுத் திருந்த வேண்டும். அதே போல் முஸ்லீம்களோ சீக்கயர்களோ சமயம் சார்ந்த உலக அரசை நிறுவ பயங்கரவாதத்தை நிலை நிறுத்தக் கூடாது.

ஐ. நா. சபை தனது பங்கிற்குப் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளைக் கடுமையாகச் செயல்படுத்த வேண்டும். எல்லா நாடுகளும் ஒன்று பட்டுச் செயல் பட்டால் உலக அமைதி எளிதில் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

***

# INDEPENDENCE DAY



Our Chief Guest Mr. S.K.Dharmalinga Raja receiving the guard of honour



Flag Salute



Speech by Our Chief Guest

# REPUBLIC DAY




Address by Ln. President P. Natarajan



Section of N.C.C. Cadets listening to the Speech



Our Principal with the Guest

## BOOK RELEASING CEREMONY




Address by our Chief Guest
Dr. M.S. Udhyamoorthy



Honouring the author



Receiving First Copy

## POLICE - STUDENTS RELATIONS




Our Chief Guest Sri Abhashkumar, S.P., Addresses




Speech by Sri S. Durai Raju, D.S.P.,



Students - Police Interaction

# பேராசிரியர் பர்டன் ஸ்டெயின் தந்த வரலாற்று ஆய்வியல் முறைகள்

டாக்டர் பி. சந்திரசேகரன், வரலாற்றுத்துறை, இராஜபாளையம்.

**முன்னுரை :**

பேராசிரியர் பர்டன் ஸ்டெயின் தமிழக வரலாற்று வரைவியல் முறையில் பெருத்த மாற்றத்தினை ஏற்படுத்திக் காட்டிய மாபெரும் ஆசான் ஆவார். அன்னார் மறைவிற்கு அஞ்சலி செலுத்துவதென்பது, அவர்தம் வரலாற்று ஆய்வியல் முறையினை நாமும் தெரிந்து அதனை நம்முடைய எழுத்துக்களில் பயன்படுத்த முயற்சிப்பதே ஆகும்.

**ஸ்டெயின் வாழ்க்கையும் – கட்டுரைகளும் :**

1926-ல் பிறந்த ஸ்டெயின், தன்னுடைய முதுகலைப் பட்டப்படிப்பை 1954லும், முனைவர் பட்டத்தினை 1958லும் சிகாகோப் பல்கலைக் கழகத்தில் பெற்றார். 1958-ல் மினேஸ்டோ பல்கலைக் கழகத்தில் பணி புகுந்து 1966 வரை அங்கு பணி புரிந்தார். ஹவாய்ப் பல்கலைக் கழகத்தில் 1967ல் பணிபுரிய நுழைந்தவர் 1983ல் அப்பல்கலைக் கழகத்திலிருந்து பேராசிரியராக ஓய்வு பெற்றார். பின்னர் இலண்டன் சென்று தங்கிய அவர் 1996ல் உயிர் பிரிந்தார். இவருடைய ஆய்வின் முழுமையான நூலாக "Peasant State and Society in South India" - 1980ல் வெளி வந்துள்ளது. ஆனால் அன்னாரின் கட்டுரைகள் 1960ம் ஆண்டிலிருந்தே "Jonsnal of Asian Studies, Adyar Library Buelletin, Indian Economy Social History Review போன்ற ஆய்வு இதழ்களில் வெளி வந்துள்ளன. இவைகளில் சில கட்டுரைகளை, நியூ எரா வெளியீட்டாளர் 1984ல் வெளியிட்டு ஸ்டெயின் வரலாற்றுடன் இணைந்து கொண்டுள்ளார். இவைகளைத் தவிர ஸ்டெயின் தொகுத்த நூல்கள் இரண்டாகும். 1. "Essays on South India" என்பது 1976ல் வெளியாகியுள்ளது. 2. "South Indian Temple" என்பது 1978ல் வெளியாகியுள்ளது.

**ஸ்டெயின் ஆய்வியல் முறைகள் :**

பணடைத் தமிழகத்தில் சமஸ்கிருதப் பண்டிதர்கள் வரவிற்குப் பின்தான் தமிழ்நாட்டில் பண்பாடே அரும்பியது என்று வாதிட்டு வந்த வரலாற்று வரையியல் முறையின் அழுத்தமான பிடியிலிருந்து திசை திருப்பிய பெருமை ஆசான் ஸ்டெயினையேச் சாரும். சுயேச்சையான சிந்தனை, மூல ஆவணங்களுக்கு, முதல் உரிமை அளித்தல், எந்த ஒரு தலைப்பின் மீது ஆய்வு நடத்தப் பெற்றாலும், அந்த ஆய்வு சம்பந்தப்பட்ட வெளியாகியிருந்த கட்டுரைகள் அனைத்தின் மீதும் நன்கு பாண்டித்தியம் பெற்றிருத்தல் போன்றவைகளே அன்னாரின் அடிப்படை ஆய்வு உத்திகளாகும். ஸ்டெயின் கூறிய கருத்துக்களில் மாறுபாடு கொண்ட கரோஷிமா கூட ஸ்டெயின் தம் ஆய்வுக்காகக் கற்றுத் தேர்ந்த நூல்களின் எண்ணிக்கையில் வியப்படைந்து போய்தான் உள்ளார் என்பதை நாம் மனதில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டியதொன்றாகும்.

ஸ்டெயினின் ஆய்வுகள் மூல ஆவணங்களை முறைப்படுத்தி தருவதிலோ, அல்லது மூல ஆவணங்களின் செய்திகளைத் தொகுத்து தருவதிலோ முடிந்துவிடவில்லை. மூல ஆவணங்களை ஆய்வதின் மூலமாக ஒரு வரலாற்றறிஞர்க்கு என்ன கருத்து கிடைக்கின்றது, அந்த கருத்து மற்ற வரலாற்றறிஞர்களின் கருத்திலிருந்து எங்ஙனம் மாறுபட்டுச் செல்கின்றது என்பதனை ஆதாரங்கள் மூலமாகச் சொல்வதில் தான் உண்மையான ஆய்வு உள்ளது என்ற முறையினைத்தான் அவர் தன்னுடைய ஆய்வுகளில் கையாண்டுள்ளார். அவருடைய ஆய்வுக் கட்டுரைகள் ஒவ்வொன்றும் ஒரு புதிய கருத்தினை வெளிப்படுத்துபவைகளாகத் தானிருந்தனவேயன்றி பழைய கருத்துக்கு ஆலோலோபம் செய்யும் முறையில் அமையவேயில்லை.

1974ல் வெளிவந்த Temple in Tamil Country 1300 - 1750 A.D. என்ற கட்டுரை ஆய்வினை மேற்கொள்ளும் இளம் ஆய்வாளர்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டியாகும். முதலில் எந்த ஒரு ஆய்வும் கேள்விகள், சந்தேகங்கள் இல்லாமல் நிகழப்போவதில்லை. எனவே அந்த கேள்விகள் முன்னுரையாக அமைய வேண்டும். பின்னால் அந்த கேள்விக்குரிய பதில்கள் எந்தந்த

வகையிலான ஆதாரங்களில் கிடைக்கின்றன என்றும், அவைகள் எத்தன்மையது என்பதையும் விளக்கிக் காட்ட வேண்டும். பின்பு எந்த வழிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது என்பதையும் தெரிவிக்க வேண்டும். பின்பு அந்த ஆய்வின் கண்டு பிடிப்புகள் என்னவென்பதை அட்டவணைகள் மூலமாகவோ, வரைபடங்கள் மூலமாகவோ சொல்லுதல் அவசியமான தொன்றாகும். பின்னர் ஆதாரம் சொல்லும் உண்மைகள் வரலாற்றுப் போக்கில் எந்த இடம் வகிக்கின்றது என்பதனை ஆய்வாளர் விளக்கியிருக்க வேண்டும். முடிவாக கட்டுரையில் ஆய்வாளர் கண்ட உண்மைகள் என்ன, அதற்கு தந்த விளக்கம் என்ன, அந்த விளக்கத்தின் வலிமை என்ன என்பதையும் ஆய்வாளர் சுட்டிக் காட்டுதல் அவசியமானதொன்றாகும் என்று ஆய்வு படிகளைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

**ஸ்டெயினும் கார்ல்மார்க்சும் :**

ஸ்டெயின் தென்னிந்திய வரலாற்றினை ஆய்வு கொள்ள நான்கு வித ஈடுபாடுகளிலிருந்தன என்று அன்னாரே குறிப்பிடுகின்றார். 1. கோயில்கள், 2. அரசு, 3. வேளாண் அமைப்பு, 4. கலாசாரம், இருந்த போதிலும் இந்த நான்கிற்கும் பின்னணியாக விளங்கிய பொருளாதார அமைப்பு என்னவென்று ஆராய முற்பட்டு வேளாண் உற்பத்தி அமைப்பின் மீது இவருடைய கவனம் விழுந்திருக்கின்றது. பொருளாதார அமைப்பே மக்களுடைய சிந்தனையில் கடவுளைப் பற்றியும், அரசினைப் பற்றியும், அவர்களுக் கிடையிலான உறவுகளைப் பற்றியும் ஓர் உருவத்தினை எழுப்பிக் காட்டுகின்றன என்பதே இவருடைய கருதுகோளாகும். எனினும் இவர் கரோஷிமோவைப் போலவோ, கெதலீன் கௌ ஐப்போலவோ மார்க்சீசிய சிந்தனாவாதி அல்ல. மார்க்சீசிய சிந்தனையின் முக்கிய அம்சமான சமூகத்தின் ஒரு பிரிவினர், மற்றொரு பிரிவினர் மீது சுரண்டி ஏகாதிபத்யம் செய்கின்றார்கள் என்ற கோட்பாட்டிலிருந்து விலகி, பொருளாதாரத் தேவைகள் ஒரு பிரிவனருக்கும், மற்றொரு பிரிவினர்களுக்கும் உடன்பாடுகளை வளர்க்கின்றது என்ற கண்ணோட்டத்தில் தனது ஆய்வுகளை நடத்தியுள்ளார்.

**ஸ்டெயினின் முக்கிய கட்டுரைகள் :**

ஸ்டெயினின் திருப்புமுனை கட்டுரை "Brahman and Peasant in Early South Indian History" என்று 1967-68ல் வெளிவந்த கட்டுரையாகும். அதிகமான பக்கங்கள் கொண்ட இந்தக் கட்டுரை, ஸ்டெயினின் பிற்கால எழுத்திற்கு அடிகோலிய கருத்தான பிராமணர்களுக்கும் வேளாண் மக்களுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை என்பதனை வலியுறுத்தி எழுதியது. இதற்குப்பின் அன்னாரின் கவனம் வேளாண் மக்களுக்கும் அரசுக்குமிடையிலான தொடர்பினேயே சுற்றிச் சுற்றி வந்தது. இச்சமயத்தில் 1973ல் ஒய்.சுப்பாராயலுவால் வெளியிடப்பட்ட "Political Georgraphy of the Cholo Country" என்ற எம்.லிட். ஆய்வு கட்டுரை ஸ்டெயினின் சிந்தனையினைப் பெரிதும் பாதித்தது. ஊக்க மூட்டியது. அதன் விளைவாகத் தோன்றிய ஆய்வுக் கட்டுரைதான் "The Segmentary State in South Indian History" என்பதாகும். இக்கட்டுரைதான் தமிழகத்தின் முழுப் பகுதிகளையும் வென்றடக்கி, சிலோனை இணைத்து, வங்காளம் வரை படையெடுத்து, கடாரத் தீவுதனைக் கைப்பற்றி, சாளுக்கிய பகுதிகளில் ஆதிக்கம் செலுத்திய சோழப் பேரரசு, இறைவனின் இறைமாட்சிமையால் இயங்கியது என்று வாதிட்டது. இங்ஙனம் அன்னார் வெளியிட்ட கருத்துக்களால், தமிழக வரலாற்று வரையியல் ஆசிரியர்களான சண்பகலட்சுமி, சுப்பாராயலு, எம்.ஜி.எஸ்.நாராயணன், பி. சண்முகம் போன்றோர்கள் மறுப்புக் கட்டுரைகள் வெளியிட்டு தமிழக வரலாற்றுச் சிந்தனைகள் விரிவடைய வழி வகுத்துத் தந்தன.

**ஸ்டெயினின் முடிவும்–ஆய்வுகளின் துவக்கமும்:**

தமிழக வரலாற்று வரையியல், ஸ்டெயின் காலத்திற்கு முன், ஸ்டெயின் காலத்திற்குப் பின் என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படும் அளவு ஸ்டெயின் கட்டுரைகள் பெரும் பாலமாக விளங்குகின்றன. அன்னார் இயம்பியவைகள் இன்னமும் முழுதுமாக மறுக்கப்பட இயலவில்லை. காரணம் அன்னாரின் கட்டுரைகள் இன்னமும் நம்மால் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு தொல்காப்பிய சூத்திரமாக அமைந்திருப்பதுதான். அவர் எழுத்துப் பணி முடிந்து விட்டது ; ஆனால் தமிழக வரலாறு இனிமேல் தான் புதியதாக எழுதப்பட வேண்டும்.

***

தொட்டணைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றணைத் தூறும் அறிவு.

– திருக்குறள்.



# அம்மா !



உருவிழந்த என்னைக் கருவாக்கி

உயிரிலே வளர்த்தாய் ! – அம்மா !

நான் உறங்கப்பார்த்து இமைமூடாமல்

நீ விழித்தாய் ! – என்னை

சாப்பிடவைக்க சந்திரனையும் சூரியனையும்

மழலை மொழியில் அழைத்தாய் ! – அம்மா !

பாசமாக பள்ளிக்கு அனுப்பி விட்டு

என்னைக் காண தவித்தாய் ! – என்னை

ஆயிரத்தில் ஒருவனாக்க அல்லும்பகலும்

ஆலையில் உழைத்தாய் ! – அம்மா !

என்னை உலகோர் புகழக்கேட்டு

உள்ளம் மகிழ்ந்தாய் ! – என்னை

செயல்படுத்திய நீ முதுமையால்

செயல் இழந்து விட்டாய் ! – அம்மா !

நீ தந்த இதயத்தில்

உன்னை இருத்தி விட்டேன் – அம்மா !

என்னை சுமந்த உன்னை

நான் சுமப்பேன் – அம்மா !

உன்னையும் இழக்க நினைப்போன்

மனிதனே இல்லை – அம்மா !

இன்றுமுதல் நீ நம் வீட்டில்

தவளும் பிள்ளை – அம்மா !

மறுஜென்மத்திலும் நீயே அன்னையாக

நானே மகனாக – அம்மா !

அம்மா ! அம்மா ! அம்மா !

– **மா. ராகவராஜன்,**
முதலாமாண்டு கணிணி அறிவியல்.

# திருக்குறள் தீபம் !

❊ முப்பாலை கண்டெடுத்து
அப்பால் உள்ளவர்க்கு(ம்)
தித்திப்பால் (தீந்தமிழை) செந்தமிழை
திகட்ட வைப்பது – குறள் !

❊ புல்லுக்குள் புதையலெடுத்து
கல்லுக்குள் கடலை உருவாக்கி
நெஞ்சுக்குள் உணர்வை
நெகிழ வைப்பது – குறள் !

❊ சிந்தனையை சிறையெடுத்து
சிறப்புகள் பல பெற்று
சிகரம் போல் வாழ்வை
சீர் பெற வைப்பது – குறள் !

❊ பூவுக்குள்ளும் புதுமை கண்டு
தீவுக்குள்ளும் திரவியம் தே(டும்)டி
நாவுக்குள்ளும் நற்றமிழை
நாளும் வளர்ப்பது – குறள் !

❊ அறம் பொருள் இன்பம் தந்து
தெய்வக் கரம் கொண்டு
திறம்படவே எழுதப்பட்டு
சிறப்பு(உறவு) கொள்ள வைப்பது – குறள் !

❊ நித்தம் ஒரு குறள் படித்து
சித்தம் என்று வாழ்வில் பெற
புத்தம் புது நூற்றாண்டில் (2000)
புதுமை காண வைப்பது – திருக்குறள் !

❊ தினம் ஒரு குறள் படித்து
தித்திக்கும் தேன் தமிழை வளர்த்து
திருவள்ளுவனைப் போற்று – வாழ்வில்
திருக்குறளை தீபம் போல் ஏற்று !

– **V. கணேசன்,** II B.A.

# புதுக்கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள்!

முனைவர் க. அழகர், தமிழ் விரிவுரையாளர்

**முன்னுரை :**

"எப்போதும் வருவதல்ல கவிதை
நினைத்தால் வருவதல்ல கவிதை
இதயம் கனத்தால் வருவது கவிதை"

என்றான் ஒரு கவிஞன். இதையே கவிமணி "உள்ளத்தில் உள்ளது கவிதை இன்பம் உருவெடுப்பது கவிதை. தெள்ளத்தெளிந்த தமிழில் உண்மை தெரிந்துரைப்பது கவிதை" என்றார். "பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்" என்றார் பாரதியார். ஆக, உணர்ச்சியின் வெளிப்பாடே கவிதை ஆகும். யாப்பு என்ற கரையை உடைத்துக் கொண்டு வரும் உணர்ச்சி வெள்ள ஓட்டமே புதுக்கவிதை ஆகும். 1910-இல் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும், வால்ட்விட்மன், எஸ்ராபவுண்ட் போன்றோர் புதுக்கவிதை எழுதினர். 1908-1918 என்ற கால இடைவெளியில் பாரதியார் வசன கவிதை எழுதினார். 1930க்குப் பின்னரே ந.பிச்சமூர்த்தி முதல் வைரமுத்து வரை ஆயிரக்கணக்கான கவிஞர்கள் புதுக்கவிதை எழுதி வருகின்றனர். புதுக்கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள் விரவிக் கிடக்கின்றன. இதைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**சமுதாயம் :**

மக்கள் ஒன்று சேர்ந்து வாழ்வதே சமுதாயம் என்பது. இச்சமுதாயத்தில் வாழக்கூடிய மக்கள் அனைவரும் சிக்கல் இல்லாமல் வாழ்கிறார்களா? எந்தப் பாதிப்பும் இன்றி நலமாக வாழ்கிறார்களா? என்றால் இல்லை. ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி எப்படி இருக்கிறது என்பதை இப்புதுக்கவிதைகள் தீர்மானிக்கின்றன.

**சமுதாயச் சிந்தனை :**

சுய சிந்தனைக்குள்ளே சுருங்கிப் போகும் நிலையைத் தாண்டி சமுதாயத்தின் வளர்ச்சியில் மகிழ்ந்து, சமுதாயத்தின் பிரச்சினைகளைத் தன்னெஞ்சில் சுமந்து, அவற்றின் தீர்விற்காகச் சிந்திப்பது தான் சமுதாயச் சிந்தனை ஆகும். தன்னைச் சுற்றி இருக்கும் உலகத்தில் எந்த மூலையில் பாதிப்புகள் நிகழ்ந்தாலும் அது தனக்கு நேர்ந்ததாக எண்ணி மனங்கொதிப்பது தான் சமுதாயச் சிந்தனை ஆகும். அந்த வகையில் கவிஞர் பெருமக்கள், வேலையில்லாத் திண்டாட்டம், வரதட்சனைக் கொடுமை, அரசியல் கூத்துக்கள், இலஞ்சம், பெண்கள் அடிமை, சாதி, மதச்சண்டை, முட்டும் மூடத்தனம், வறுமை போன்ற பிரச்சனைகளைச் சமுதாயத்தில் கண்கூடாகப் பார்க்கின்றனர். இவற்றைக் கண்டு நெஞ்சு பொறுக்காமல், தம் கவிதைகளில் தம் சிந்தனைகளைச் சமுதாயச் சிந்தனைகளாக வடிக்கின்றனர். சமுதாயத்தை அடியொற்றி சில கட்டுப்பாடுகளை விதிக்கும் போது அச்சமுதாயம் வளர்ச்சி பெறுகிறது.

**தண்ணீர்ப் பிரச்சனை :**

காளையை அடக்குதல், வில்லை முறித்தல் போன்ற செயற்கரிய செயலைச் செய்து முடித்து, தன் வீரத்தை வெளிப்படுத்திக் கன்னிப் பெண்ணைக் கைப்பிடிப்பது அந்தக் காலம். இக்காலத்தில் சமுதாயத்தை ஆட்டிப் படைக்கும் பிரச்சனை தண்ணீர்ப் பிரச்சனை ஆகும். தன் அத்தான் ஆறுமுகத்தால் தண்ணீர்க் கொண்டு வர முடியுமா என்று சவால் விடுகிறாள் அலமேலு என்பதை எஸ்.அறிவுமணி தன் கவிதையில் படைக்கிறார் :-

"அன்புள்ள அத்தான்
ஆறுமுகத்துக்கு வணக்கம்
நீங்கள் என்னை மணம் முடிக்க,
மதுரைக்குப் பக்கத்தில் உள்ள
அலங்காநல்லூர் சென்று
ஜல்லிக் கட்டுக் காளையை
அடக்க வேண்டாம்!
உள்ளூரிலேயே நிற்காமல் போகும்
கார்ப்பரேசன் லாரியை அடக்கி மடக்கி
இரண்டு குடம் தண்ணீர்
பிடித்துத் தந்தால் போதும்
காலமெல்லாம் உங்கள்
காலடியில் கிடப்பாள் இந்த அலமேலு!"

**வரதட்சனை :**

இன்றைய திருமணங்கள் நிச்சயிக்கப்படுவது சொர்க்கத்தில் இல்லை. ரொக்கத்தில் பவுனில். சுவைத் தேனைச் சுவைப்பதற்குச் சில்லரை கேட்கலாமா? அவள் உன் சொந்தம் என வந்த பிறகு பொன் எதற்கு? புரண்டு வரும் பணம் எதற்கு? இதோ கன்னிப் பெண்களின் கழுத்தில் தாலிக்கயிறு ஏறாததால் உயிரை மாய்த்துக் கொள்வதை ஒரு புதுக்கவிதை தெரிவிக்கிறது.

"எங்கள் கழுத்தில் கயிறு ஏறாததால்
கயிற்றில் கழுத்தை ஏற்றுகிறோம்"

"அன்று நீதி வேண்டி கண்ணகி
எரித்தாள் மதுரையை – ஆனால் இன்று
நிதி வேண்டி கண்ணகிகளே
எரிக்கப் படுகிறார்கள் அதே மதுரையில்"

மணப்பெண் மரணப்பெண் ஆவதை இக் கவிதைகள் சுட்டுகின்றன.

**இலஞ்சம் :**

நமது நாட்டில் கையூட்டு (இலஞ்சம்) மலிந்து கிடப்பதைத் தமிழன்பன் கூறுகிறார்.

"சுதந்திர தேவி
வெள்ளையனே வெளியேறு
என்றோம்
வெளியேறி விட்டான்
கொள்ளையனே வெளியேறு
யாரைப் பார்த்து
யார் சொல்வது"

**சுரண்டல் :**

அன்று சில அரசியல் தலைவர்கள் "சுதந்திரம் எனது பிறப்புரிமை" என்றனர். ஆனால் இன்றைய அரசியல் தலைவர்கள் "சுரண்டல் எனது பிறப்புரிமை" என்பதை "கிழிசல்கள்" என்ற கவிதை நூல் கூறுவது.

"சுதந்திரத்திற்கு முன்னால்
சுதந்திரம் என் பிறப்புரிமை
சுதந்திரத்திற்குப் பின்னால்
சுரண்டல் என் பிறப்புரிமை"

**வேலையில்லாத் திண்டாட்டம் :**

வேலையில்லாத் திண்டாட்டம் என்பது சமுதாயத்திலுள்ள சாபக்கேடு ஆகும். மனை விற்று, மாடு, காடு விற்று படித்த பட்டதாரி மாணவர், படித்து முடித்த பின் தனக்கு வேலை இல்லாமை குறித்து புலம்புவதை ஒரு புதுக்கவிதை சுட்டுகிறது.

"பட்டப் படிப்புக்குக் கொட்டி அழுத பணத்தில்
பெட்டிக் கடை வைத்தாவது
பிழைத்திருப்பேன்"

**சாதிக்கொடுமை :**

சாதிக்கொடுமையை விளக்கும் புதுக்கவிதை இதோ,

"கோயில் தாழ்வாரத்தில் கோடை
மழைக்கு ஒதுங்கினேன்!
பட்டர் என்னை – தீட்டு ஒதுங்குடா என்றார்
அந்தக் கோயிலின் சொர்க்க வாசலுக்கு
வாணம் தோண்டியவனின்
மகன் நான்"

**வறுமை :**

வறுமை என்பது இச்சமுதாயத்தில் தலை விரித்தாடுகிறது. அதை காமராஜன் தன் கவிதையில் சுட்டுகிறார்.

"குழந்தையின் பசியை நாங்கள் அறிந்ததில்லை
ஏனென்றால் நாங்கள் பசியின் குழந்தைகள்"

"இறந்த பின்னால் தாஜ்மகால் வேண்டாம்
இருக்கும் போதே ஒரு குடிசை கொடுங்கள்"

**முடிவுரை :**

இதன் மூலம், இன்றைய சமுதாயச் சிக்கல்களைக் கவிஞர்கள் தம் கவியாற்றலால் வெளிப்படுத்தி, நம் நெஞ்சங்களை ஈரமாக்கிச் சென்றுள்ளனர். சமுதாயச் சிக்கல்கள் கவிஞர்களின் சிந்தனையில் கருவாகி, பின் உருவாகி வெளிப்படுதலே கவிதைச் சிக்கலாம்.

***

> கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
> மாடல்ல மற்றை யவை.
>
> – திருக்குறள்.

# தேயும் சூரியன்கள் !

- வாலிபச் சூரியர்களே
  வருந்துகின்றேன்
  உங்களின் கிரகணங்கள் கண்டு!

- உன்னை
  எப்போது உணர்வாய்
  உலகிற்கே விடியலின்
  வெளிச்சம் விதைக்கும்
  உன்னதம் உனக்கு
  உண்டு என்பதை ?

- நீ
  வரும் பாதையெல்லாம்
  காதல் சேற்றில் முளைக்கும்
  கன்னித் தாமரைகள்
  கவனம்
  கால் தவறி விடாதே !

- எங்கோ கண்ட
  இடையைப் பற்றி
  நெஞ்சத் தராசில்
  எடை பார்க்கின்றாய் !

- இது நீ
  நடை மாறிப் போகும்
  பயணம் !

- துளிர் விடும் முன்னே
  காய்க்க நினைப்பவர்களே
  காயம் அது மாயம் !

- கல்விக்கு
  இது கால மல்ல
  கல்விக்கென்று
  உனக்குள்
  சொல்லிக்கொள் !

- நீ
  சுற்றாதே
  உன்னை சுற்றி வரச்செய்
  உலகத்தை
  நீயே
  உன் இலக்கை
  தீர்மானித்துக்கொள் !

- காலத்தை
  தீர்மானிக்கும் திறன்
  உனக்குள் உண்டு
  விரையம் செய்யாதே
  இந்நூற்றாண்டின்
  விடியல் உன் கையில் !

- அரசியல்
  அவசியம் அறி
  அதற்குள் அவிந்து விடாதே !

- விழித்திருப்பதே
  உன் வேலை
  தூங்கு மஞ்சுகளை
  உசுப்புவதே உன் சேவை !

- நீயே
  உறங்கிக் கொண்டிருக்கிறாய்
  உன்னை விட
  உயரத்திலிருக்கும்
  நட்சத்திரங்களா
  உன்னை உசுப்பும் !

- விழித்திருப்பதே
  உன் வேலை
  உறங்கி விடாதே !

- நிலவுக்குத் தான்
  தேய்பிறை உண்டு
  உனக்குமா ?

- இப்படியே
  நீ இருந்தால்
  நீ எழுந்து வர
  இன்னும் இரு நூற்றாண்டு ஆகலாம் !

– A. முத்து, III B.A., (History)

# புதியதோர் உலகம் செய்வோம் !

- **P. பழனிமுருகன்.** I B.Com., (E)

**முன்னுரை :**

"புதியதோர் உலகம் செய்வோம் – கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்"

என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். இந்த 21ஆம் நூற்றாண்டில் உலகத்தில் குறிப்பாக இந்தியாவில் என்னென்ன மாற்றங்கள் செய்ய வேண்டும், என்ன விதமான புதிய உலகத்தை நாம் படைக்க வேண்டும், என்ற என்னுடைய எண்ணங்களை இக்கட்டுரையில் கூறியிருக்கிறேன். என்னுடைய எண்ணங்கள் இதோ..!

**கல்வி முறை :**

கல்வி முறையில் நாம் பல முன்னேற்றங்களைப் பெற்றிருந்தாலும் இன்னும் கிராமப்புறங்களில் எத்தனையோ ஏழை எளிய சிறுவர்கள் வேலைக்கு அனுப்பப்படுகின்றனர். இதனால் நன்றாகப் படிக்கக் கூடிய மாணவர்களின் நிலை பரிதாபமாக இருக்கின்றன. சிவகாசியில் தீப்பெட்டி தொழிற்சாலையில் அதிக அளவில் வேலை செய்பவர்கள் சிறியவர்களே. அவர்களுக்காக நாம் எந்த விதமான கண்டிப்பும் தெரிவிப்பது இல்லை. இதனால் அவர்களின் நல்வாழ்க்கை பாதிக்கப்படுவதுடன், நாட்டின் பெருமையும் பாதிக்கப்படுகின்றன. ஏனெனில் இந்தியா கல்வி வளர்ச்சி மிகக்குறைந்த இடத்தையே பெற்றிருக்கிறது. இதற்காக, அரசாங்கம் பல நல்ல வழிகளைக் கண்டுபிடித்து வேலைக்குச் செல்லும் மாணவர்களின் வாழ்க்கையில் ஒளி பெறச் செய்திட வேண்டும்.

**தீண்டாமை :**

நம் நாட்டில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்கின்றனர். அதில் பல ஜாதி, சமயங்களும் இருக்கின்றன. இதனால் பல கலவரங்களும், கொலைகளும் கூட நடக்கின்றன. ஆனால் வெளிநாடுகளில் எந்த ஒருவனும் தன்னுடைய பெயருடன் ஜாதிப்பெயர்களை இணைத்துக் கொள்வது இல்லை. நாம் ஒரு அமெரிக்க நாட்டினரை சந்தித்து நீ என்ன ஜாதி என்று கேட்டால், அவர் நான் அமெரிக்கன் என்று கூறுவான். ஆனால் இதையே அரசாங்கமும் வலுப்படுத்தும் வகையில் பள்ளிகளில் சேரும் போதும், வேலையில் சேரும் போதும் நீ எந்தச் சாதி? என்று கேட்பதை அரசாங்கம் தடை செய்ய வேண்டும். அப்போது தான் இதை ஒழித்துக் கட்ட முடியும்.

**அரசியல் :**

நம் நாட்டில் அரசியல் என்று பார்த்தால் அது எப்போதும் ஊழல் நிறைந்ததாகவும், ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்வதாகவும் தான் இருக்கின்றன. எந்த ஒரு அமைச்சரும், மந்திரியும் தன்னுடைய பரம்பரை நன்றாக வாழ்வதற்குச் சொத்துக்களைச் சேர்ப்பதையே தங்களுடைய குறிக்கோளாக கொண்டிருக்கின்றனர். இதைத் தடுக்க வேண்டுமானால் இளைஞர்களும் அரசியலில் சேர்ந்து நாட்டுப்பற்றை வளர்த்துக் கொண்டு அதை நல்வழிப்படுத்த வேண்டும். "இளைஞர்கள் வருங்காலத் தூண்கள்" என்ற கூற்றுக்கு ஏற்ப அவர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொண்டு அரசியலில் சேராமல் கூட நாட்டுக்காக தொண்டுச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர்கள் மனதில் அழுத்தமாக ஏற்பட வேண்டும்.

**பொருளாதாரம் மற்றும் தொழில் துறை :**

தொழில் துறைகளைப் பொருத்த வரையில் நாம் இன்றும் வளர்ந்து வரும் நாடாகவே இருந்து வருகிறோம். அதை மாற்றி வளரும் நாடுகளுடன் நாமும் இணைய வேண்டும். நம் நாட்டில் ஏராளமான விஞ்ஞான ஆய்வாளர்கள் இருந்தாலும் பெரும்பாலோர் அயல் நாடுகளில் தங்கள் அறிவை அடகு வைக்கின்றனர். இது நம் நாட்டிற்கு எவ்வளவு பெரிய இழப்பு என்பதை ஒவ்வொரு குடிமகனும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

மிக மோசமான நிலையில் தான் நாம் இருக்கிறோம். உலக வங்கியில் கடன் வாங்கியவர்களில் நாம் முதன்மையான இடத்தைப் பெறுகிறோம். இதை நாம் போக்குவதற்குப் பல நல்ல வழிமுறைகளைக் கையாள வேண்டும். விண்வெளியில் நாமும் வெளிநாடுகளைப் போல பல புதிய சேட்டிலைட்டுகளை ஏவுகின்றோம். இது நமக்கு வெற்றியாக இருந்தாலும் இன்னும் பல புதிய முறைகளைக் கையாண்டு நாட்டின் பொருளாதார வளத்தை முன்னேற்ற வேண்டும். "ஒரு மனிதனின்

வருமானம் உயர்ந்தால் தான் நாட்டின் பொருளாதாரம் உயரும்" என்பதை மனதில் கொண்டு ஒவ்வொரு மனிதனும் உழைக்க வேண்டும்.

### பெண்கள் முன்னேற்றம் :

நம் நாட்டை நாம் தாய் திரு நாடு என்று அழைக்கின்றோம். ஆனால் பெண்களின் முன்னேற்றம் எந்த அளவு இருக்கிறது என்று பார்த்தால் எந்த விதமான முயற்சியும் எடுத்தாகத் தெரியவில்லை. நகர்ப் புறங்களில் ஓரளவு முன்னறேற்றம் இருந்தாலும், கிராமப்புறங்களில் பெண்கள் எந்த விதமான முன்னேற்றத்தையும் அடைந்ததாகத் தெரியவில்லை. கிராமத்துப் பெரியவர்களைப் பொருத்த வரையில் எப்போதும் பெண்கள் வீட்டிலேயே முடங்கிக் கிடக்க வேண்டும் என்றும், மூடப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றியே ஆக வேண்டும் என்று கூறுகின்றனர். அதுபோக வரதட்சணை என்ற பெயரில் பெண்கள் மிகவும் கொடுமைப்படுத்தப்படுகின்றனர். அரசாங்கம் இதற்குத் தடை விதித்தபோதும் எந்த ஒரு வீட்டிலும் அடுப்பு வெடிக்காமல் இருந்தது இல்லை. கணவனே மனைவியை கொல்லாமல் இருந்ததும் இல்லை. இதை நாம் பத்திரிக்கைகள் மூலம் கண்டும், கேட்டும், அறிந்தும் இருக்கிறோம்.

### சுற்றுப்புறச்சூழல் :

சுற்றுப்புறச்சூழல் என்று பார்த்தோமானால் மிக மோசமான நிலையிலேயே இருக்கின்றன. நம் நாட்டில் எங்குப் பார்த்தாலும் குப்பை கூளங்களும், சாக்கடைகளும் நிறைந்து வழிந்து கொண்டே இருக்கின்றன. இதனால் பல நோய்களும் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. இதைத் தடுக்க வேண்டுமானால் அரசாங்கம் பல நல்ல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அயல் நாடுகளில் உள்ளது போல் மிக அதிகமான அளவில் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். அதை உடனடியாகச் செய்ய முடியாவிட்டாலும் படிப்படியாக செய்ய வேண்டும். அயல்நாடுகளில் உள்ளது போல் சுற்றுப்புறங்களை அசுத்தம் செய்பவர்களின் மீது வழக்குகள் தொடரப்பட்டு அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். அப்போது தான் நம்முடைய நாட்டை நாம் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். இதை ஒவ்வொரு மனிதனும் உணர வேண்டும். அது மட்டுமல்லாது அதைப் பற்றிய கருத்தரங்குகளை ஊர் முழுவதும் நடத்த வேண்டும். அதில் சுற்றுப்புற தூய்மையை பற்றியும், அதை எவ்வாறு யெல்லாம் காக்க வேண்டும் என்பது பற்றியும் நடத்த வேண்டும். பாமர மக்களுக்குப் புரியும் வகையில் அதை நாடகங்களின் மூலமாகவும், சில வாசகங்கள் மூலமாகவும் உணர்த்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இதை எல்லாம் ஒடுக்கப்பட வேண்டும் என்றால் அரசின் சட்ட திட்டங்கள் கடுமையானதாக இருக்க வேண்டும். பெண்களும் தங்களுடைய கைக் கட்டுகளைத் தகர்த்து எறிந்து விட்டு நாட்டின் நலனுக்காகவும், தங்களுடைய நலனுக்காகவும் வீட்டிற்குள் முடங்கிக் கிடக்காமல் வெளியே வர வேண்டும். இன்றைய சூழ்நிலையில் இருவர் வேலை செய்தால் தான் குடும்பத்தைக் காப்பாற்ற முடியும். ஆணுக்குப் பெண் அடிமை இல்லை என்கிற காரணத்தை மனதிற்குள் வைத்து அவர்கள் தங்களுக்குத் தேவையான வாழ்க்கையை தானே தேர்வு செய்து கொள்ள வேண்டும்.

### விளையாட்டு:

விளையாட்டு என்று சொன்னால் நம் நாடு ஓரளவு முன்னேறி வருகிறது என்று தான் சொல்ல வேண்டும். ஏனெனில் இப்போது நடந்த ஆசிய போட்டிகளில் நம் இந்தியர்கள் பல விதமான பதக்கங்களைப் பெற்று இருக்கின்றனர். இருந்த போதிலும் இன்னும் பல முன்னேற்றங்களை நாம் பெற வேண்டுமானால், சிறு வயதிலிருந்தே மாணவர்களுக்குப் பயிற்சிகள் கொடுக்க வேண்டும். அப்போது தான் நம்முடைய நாட்டின் பெருமை உயரும்.

### முடிவுரை :

நம் நாடு ஒரு பெரிய மக்கள் தொகையை கொண்ட நாடாக இருந்தாலும், பண்டைய பாரம்பரியங்களில் பெயர் பெற்றதாகும். அது இன்று வரை கடைப்பிடிக்கப் பட்டுதான் வருகின்றன. நாம் ஒவ்வொருவரும் நம் மனதில் நாட்டுப்பற்றை வளர்த்துக் கொண்டு, நம் நாடு முன்னேற தேவையான வழிமுறைகளை தேர்ந்தெடுத்து அதை நிறைவேற்றுவதற்குப் பாடுபட வேண்டும். தொண்டு, சேவை ஆகியவைகள் தேசிய இலட்சியம் இவற்றை மக்கள் மனதில் பதிய வைத்து, நம் நாட்டை முன்னேற்ற வேண்டும். நம்முடைய நாட்டை உயர்த்த நாமும் பாடுபடுவோம்.

வாழ்க பாரதம் ! வளர்க அதன் புகழ் !

பல புதிய முறைகளைக் கையாண்டு இளைஞர் களாகிய நாம் புதியதோர் உலகை படைக்க வேண்டும்.

***

# N.S.S.



Keeping the city clean campaign



Rural reconstruction work



Blood Group Identification Camp



N.S.S Camp Our Collector Presides



N.S.S. Day Sri S.K.Dharmalinga Raja Addresses




Rotary Sponsored medical camp - Thombakulam

## ஏழை வர்க்கம் !

* சமூகக் கணக்கில்
வறுமைக் கோட்டின் கீழ்
ஒதுக்கப்பட்ட
மூன்றாவது வர்க்கம் !

* வகுபடும் வரை
வகுக்கப்பட்டு வந்த
வசதியிழந்த மீதிகள் !

* மக்கள் தொகைக்
கணக்கெடுப்பிற்காக
கணக்கில் சேரும்
வெற்று வர்க்கங்கள் !

* வயிற்றுச் சிறைக்கு
கட்டுப்பட்டு
அரை குறையாய்
கப்பங்கட்டும்
வறுமையின் கைதிகள் !

* பெருக்கல், கூட்டல்
வகுத்தல்களுக்கென
வயிற்றில் சுருக்கல் விழுந்த
கழித்தல்கள் !

* வகுப்புகளின்
வறுமைப் புத்தகத்தின்
பாட பேதங்கள் !

## தன்மானம் !

* பெண்களின்
கற்பழிப்பு
மாலையில்
மானத்திற்கு பயந்து
உதிரும் மலர்கள் !

## ஹைக்கூ... துளிகள் !

* கோப்பை நிறைய
கூரைத் தண்ணீர்
ஏமாந்தான் ஏழைச் சிறுவன் !

* மழை ஓய்ந்த பின்பும்
நனைந்தேன்
மரத்தடியில் !

* நான் நிழலில்
வெயிலில் கருகுகிறாள்
வேலை செய்யும் தாய் !

* இரவுகளில்
ஆந்தையாக ஆசை
தெருவிளக்கில்லா வீதி !

* அழும் குழந்தை
இறந்த தாயருகே
பாலுக்காக !

* எல்லாம் இருக்கிறது
நீங்கள் கேட்கும்
வரதட்சணையைத் தவிர !

* என்னதான் வளமிருந்தாலும்
இலை போடும் இடத்தில்
பிச்சைக்காரன் !

* கறுப்பாய் மேகங்கள்
சிவந்து விட்டது
கண்மாய் நிறைத்து !

* இரவில் ஏமாந்தேன்
தீப்பொறியென
மின்மினிகள் !

* தூக்கணாங் குருவிக்கூடு
தூங்கும் குருவி
தூங்காத மின்மினி !

– **க. முத்துப்பாண்டி**, எம்.ஏ., வரலாறு 2ம் ஆண்டு.

# நிதானம் !

க. மாரிமுத்து. II B.Com.,

சிவாவின் குடும்பம் எளிய நடுத்தரக் குடும்பம். அவனது அப்பா சிதம்பரம் தனியார் தொழிற்சாலையில் "எழுத்தர்" பணியில் இருந்து கொண்டு சிவாவை பி.ஏ. படிக்க வைத்தார். மகள் ஷைலஷாவை சுமார் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் கல்லூரியில் பி.பி.ஏ. படிக்க வைத்துள்ளார். சிவாவின் அம்மா ஜானகி குடும்பத்தைப் பராமரிக்கும் பணியில் இருந்தார்.

சிவா வேலையில்லாத பட்டதாரி. தற்போது சீர்திருத்த மக்கள் கட்சியில் தொண்டனாக இருந்தான். பெயரில்தான் சீர்திருத்தம் தவிர செயலில் இல்லை அந்தக் கட்சியில்.

"அம்மா... அப்பாவுக்கு அடுத்த மாசம்தான் சம்பளம். தங்கச்சி ஷைலுவுக்கு காலேஜ் பீஸ், பஸ் பீஸ் கட்ட பணம் இல்லை அல்லவா..." என்றான் சிவா.

"அதற்கு என்னடா" என்றாள் ஜானகி.

"நான் சேர்ந்திருக்கிற கட்சியில தலைவர்கிட்ட கேட்டு கொஞ்சம் பணம் வாங்கிட்டு வாரேன்மா" என்றான்.

"டேய் சிவா, கட்சி கட்சின்னு ஏன்டா அலையுற, முழுசா ஒரு வேலையை தேடிக்கிட்டு அதுல கிடைக்கிற பணத்தைச் சம்பாதித்து கொண்டு வாடா" என்று அறிவுரைகள் பல கூறினார்.

ஆனால் "செவிடன் காதில் ஊதிய சங்கு போல.." சரிம்மா.. இப்படியே அறிவுரை கூறிக்கிட்டே இருங்க நான் போயி பணம் வாங்கிட்டு வர்றேன் என்று கூறிவிட்டுக் கிளம்பினான்.

"அம்மா நான் காலேஜ் போயிட்டு வர்றேன்" என்றாள் சிவாவின் தங்கை ஷைலஷா.

அன்று மாலை சிவா பணத்துடன் வீடு வந்து சேர்ந்தான்.

"அம்மா இந்தாங்க பணம். தங்கச்சி ஷைலுவுக்கு நாளைக்கு பீஸ் கட்ட கொடுத்திடுங்க.."

"எதுக்குடா பணம் வாங்கிட்டு வந்த... அரசியல்வாதிங்க மக்களை சுரண்டி திங்கிறவங்க... அவங்க காரணமில்லாம பணம் தரமாட்டாங்க.."

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லம்மா, நாளைக்கு விலைவாசி உயர்வு மற்றும் சில கோரிக்கைகளை வச்சு எங்க கட்சிக்காரங்க எல்லோரும் சேர்ந்து சாலை மறியல் போராட்டம் நடத்தப் போறோம். அந்தப் போராட்டத்திற்கு நான் தலைவர்ன்னு சொல்லி பணத்தை தலைவர் என்கிட்ட கொடுத்திட்டாரு."

"போராட்டமும் வேண்டாம்... ஒரு மண்ணாங் கட்டியும் வேண்டாம்... நீ அந்த போராட்டத்தில கலந்துக்க வேண்டாம்" என்றாள் ஜானகி.

மறுநாள், அம்மா ஜானகி சொன்ன வார்த்தையைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் போராட்டத்தில் கலந்து கொள்வது என்று முடிவு செய்து வீட்டை விட்டு வெளியே சென்றான்.

முக்கியப் பகுதிகளில் போராட்டம் ஆரம்பமானது.

"முனியாண்டி, மாயாண்டி, ராமா" நீங்க மூணு பேரும் இங்கே வாங்க என்று தனியே அழைத்தான் சிவா.

"நம்முடைய கோரிக்கைகள் எல்லாம் ஏற்றுக் கொள்ளனும்னா நீங்க மூணு பேரும் சேர்ந்து பஸ்சுக்கு தீ வையுங்க" நான் போய் மாவட்ட தலைவரை பார்த்திட்டு வந்திடுறேன் என்றான் சிவா.

"முனியாண்டி பஸ் வருதுடா அதை நிறுத்து" என்றான் மாயாண்டி.

"பஸ்ஸை நிறுத்தினான்" முனியாண்டி. இராமா "நீ டிரைவரை இறங்கச் சொல்லு" என்றான் முனியாண்டி.

"எல்லோரும் கீழே இறங்குங்க" என்றான் மாயாண்டி.

"ம்..ம்... இறங்குங்க..." என்றான்.

"பதட்டத்தில் பலர் இறங்கினர். சில பேர் அந்த பஸ்ஸில் மாட்டிக் கொண்டனர். அதற்குள்ளாக அந்தச் சம்பவம் நடந்தது."

இராமா "பெட்ரோலை ஊத்துடா"

"மாயாண்டி குண்டை வீசுடா" என்றான்.

"பஸ் தீப்பற்றி கொண்டு எரிந்தது."

"சில மணி நேரம் கழித்து சம்பவம் நடந்த

இடத்திற்கு சிவா வந்தான். அங்கே கூட்டம் இருப்பதைக் கண்டான். அருகே வந்து பஸ்ஸைப் பார்த்தான். அந்த பஸ் அவன் (சிவா) தங்கை ஷைலஷா செல்லும் கல்லூரி பஸ் அதிர்ச்சி அடைந்தான்."

அருகில் உள்ளவர்களிடம் விசாரித்ததில் அவன் தங்கை ஷைலஷாவும் இருப்பதை தெரிந்து கொண்டான்.

"கொஞ்ச நேரத்தில் நிதானத்தை இழந்த விட்டேனே.." என்று கதறி அழத் தொடங்கினான் சிவா. அப்படியே மெதுவாக வீட்டை நோக்கி நடந்தான். வீட்டு வாசல் படியை தொட்டவுடன்,

"வராதே நில்" என்று குரல் கொடுத்தார் சிவாவின் அப்பா சிதம்பரம்.

"அப்படியே சிலை போல் நின்றான்"

"டேய் பாவி... என் மகளை அநியாயமா கொன்னுட்டியே.. கட்சி.. கட்சின்னு சொன்னயே அவங்க என் மகளை உசரோட கொண்டு வர முடியுமா... டேய்.. அரசியல் ஒரு சாக்கடை... அதுல நீ விழுந்தது மட்டுமில்லாமல் என் அருமை மக்களையும் கொன்னுட்டேயடா... அரசியல்வாதிங்க சம்பாதிக்க உங்களை போல உள்ள இளைஞர்களை தூண்டி விடுறாங்க. அவங்க விரிக்கிற வலையில நீங்களெல்லாம் விழுந்திடுறேங்க... அவங்க இலஞ்சம் வாங்கிக் கூட சம்பாதிச்சுடுவாங்க... நீங்களெல்லாம் கடைசி வரைக்கும் தொண்டனாகவே இருக்கீங்க..." என்று கூறிக் கொண்டு இருக்கையில் அவரது மனைவி ஜானகி (சிவாவின் அம்மா) வீட்டிற்குள் இருந்து அழுது கொண்டே பேசினாள்.

"டேய் கொடும்பாவி... பெத்த மனது பித்து பிள்ளை மனசு கல்லுன்னு இப்பதாண்ட புரிஞ்சுக்கிட்டேன்."

"என்னைப் போல உள்ள தாயுங்க எத்தனை பேர் தவிப்பாங்க"

"ஒவ்வொரு பெத்தவங்களும் அவங்க ரத்தம் சிந்தி உழைச்சு பிள்ளைகளைப் படிக்க வைக்கிறாங்க. கட்சி கட்சின்னு அலையுற உங்களைப் போல உள்ள அரசியல்வாதிங்க சம்பாதிக்க நீங்க அப்பாவி மக்களை அநியாயமா கொன்னுடிறேங்க."

"போராட்டம் என்றால் அமைதி வழியில் நடத்துங்க. வெறியன்களா ஏண்டா மாறுறீங்க.. நமக்கெல்லாம் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தாரே மகாத்மா காந்தி அவரு அமைதி வழியில தான் சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தாரு"

"இனி நாங்க உனக்கு பெத்தவங்க இல்லை, நீ எங்காவது போடா.." என்று அழுது கொண்டே கூறினாள் ஜானகி.

திருந்திய சிவாவின் நெஞ்சம் திசை மாறி சென்றது இலட்சிய நோக்கத்தை அடைவதற்கு...!

***

## தன்னம்பிக்கை !

❖ மனிதனே !
எதையும்
முடிவு செய்ய வேண்டாம் !

❖ ஆனால்
முயற்சி எடுப்பதை
விட்டு விடாதே !

❖ புரட்சி செய்
ஆனால்
வன்முறை விதைக்கு
நீர் வார்க்காதே !

❖ தீபம் ஏற்று
ஆனால், தீயை
மூட்டி விடாதே !

❖ தடுக்கி
விழுவது தவறில்லை
ஆனால்
எழுந்து நடக்காமல்
இருந்து விடாதே !

❖ வெற்றி பெற வேண்டாம்
ஆனால்
தோல்வியைக் கண்டுத்
துவண்டு விடாதே !

❖ தடங்களைக் கண்டு
தயக்கம் காட்டாமல்
தன்னம்பிக்கையோடு
எதிர் நீச்சல் போடு
விரைவில் வெற்றிக் கனி
உன் கையில்...!

– B. MUTHUKUMAR, II B.Sc., (Maths)



❖ எவ்வளவு துன்பங்களையும் சகிக்கத் தயாராயிரு.

## ஏழை சிறுவனே..!

* ஏர் பிடித்து
சோறு போடும்
ஏழை குடும்பத்தில் பிறந்து
எருமை மேய்க்கும்
ஏழைச் சிறுவனே...
என்ன பலன் கண்டாய்
கல்வி கற்கும் காலத்தில்
காடு மேடுகளை கடக்கின்றாய்
காலமெல்லாம் கண்ணீர் வடித்து
வாழ்க்கைச் சுமையை சுமக்கப் போகிறாயா..!
ஏழையாகப் பிறந்தாலும்..
சுதந்திர நாட்டில்
சுதந்திரக் குழந்தையாய்
துள்ளிக் குதித்திடும் புள்ளி மான் போல்...
இந்த வயதில் கவலைகளும்
அதிக வேலைகளும்
உனை ஈன்றவள் கொடுத்தாளா
குதித்துப் பள்ளி செல்லும் வயதில்
கூடிய கவலை ஏன் சொல்லு
வடித்த சோறுக்கு
வாழ்நாளெல்லாம் கவலை வேண்டாம்
எதிர் காலத்தை எண்ணி
இன்றே ஏடைத் தூக்கிடு சிறுவனே...!

## காதல்..!

* காதல் என்பது விளையாட்டல்ல
காதல் என்றும் கடலைக் கடக்க
அன்பு என்னும் படகு வேண்டும்
ஆயிரம் ஆயிரம்
அப்பாவி ஆண்களே
அலங்கோல மாக்கினாய்
துள்ளிடும் இளமையை
துடிக்கத்துடிக்க வைத்தாய்
வெள்ளை நெஞ்சில்
வெட்டிய கீரல் போல்
பெண்களின் ஆசை
என்னைப் போன்ற
எண்ணற்ற பேரின்
இன்ப ஆசைகளை தூர்த்தாய்
வாழ்க்கையை காதலாய் வைத்து
வாலிப உள்ளத்தைக் கொன்றாய்..!

- C. KUMARESAN, I B.Com.,

## சிந்தனைக்கு சில விஷயங்கள்!

- பொறுமை என்பது கசப்பான செடிதான் ஆனால் அது தரும் கனிகள் சுவையானவை.
- வீரம் என்பது உடலின் வலிமையில் இல்லை. உள்ளத்தின் உறுதியில் இருக்கிறது.
- எந்தக் காரியத்தையும் உற்சாகத்தோடு செய்கிறவன் தன் நோக்கத்தை அடையத் தவறுவது இல்லை.
- பணத்தை விட அறிவு உயர்ந்தது. அறிவை விட ஒழுக்கம் உயர்ந்தது.
- கோபம் முட்டாள்தனத்தில் உதிக்கிறது. பிறகு அது வருத்தத்தில் முடிவடைகிறது.
- மனிதன் நிலத்தை சொந்தமாக்கிக் கொள்கிறான். இறுதியில் நிலம் மனிதனைச் சொந்தமாக்கிக் கொள்கிறது.

– க. மாடசாமி, I B.Com., (E)

## தண்டனை !

* தேனீக்கள்
சிரமப்பட்டுக் கட்டிய
தேனடை கலைத்தேன்
பூக்களைக்
கற்பழித்த குற்றத்திற்கு..!

– க. முத்துக்குமார், II M.A., (History)

- Much of the vitablity in a friendship lies in the honouring of differences not simply in the enjoyment of similarities.
- When you don't know what you want you often end up where you don't want to be.

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

– திருக்குறள்.

✧ யாராவது உன்னை அவமதித்தாலும் கோபம் கொள்ளாதே.



# HUMAN RIGHTS DAY - HISTORY DAY



Human Rights Day Address by Smt. Sudha Seshayyan
(Stanley Medical College, Chennai)




"Skit"



Human Rights Day Participation



(History Day) - Exibition opened by
Sri. Abhashkumar, I.P.S.,



Honouring Chief Guest Kavignar Vijaya Krishnan
(Pondicherry)



Prize distribution by Dr. R. Venkatratnam
(Syndicate Member, MKU)

## தாய் !

✦ பூ மகளுக்கு – எனைக்
காட்டியதும் – தன்
நாவினில் பாமகளை
வைத்துத் தாலாட்டுச்
சொன்ன வரும்
என் தாய் !

✦ உடலில் ஓடும்
குருதியின் – ஒரு
பிரிவிற்கு பந்த்
கொடுத்து எனக்குப்
பாலாய்க் கொடுத்தவள்
என் தாய் !

✦ உருவமே ! இல்லாத – என்
தந்தை விந்துவான
எனக்கு உருவம் அளித்து
தன் கருப்பையில்
தங்கச் செய்து – உயிரும்
கொடுத்தவள் என் தாய் !

✦ தன் உணர்ச்சிகளை
அடக்கி என் உணர்வுக்கு
மதிப்பளித்தவள்
என் தாய் !

✦ சிலர் பேசும் போதும்
எனை ஏசும் போதும்
எனக்காக கொடி
தூக்கியவர் என் தாய் !

✦ என் உயிர் உள்ளவரை
என் தாய்க்குத் தேவையறிந்து
சேவை செய்ய வேண்டும்
ஆண்டவனே !

– A.B. பாலமுருகன். II B.A.,

## துணுக்குச் செய்திகள் !

★ இந்தியாவில் முதன் முதலாக பின்கோடு அறிமுகப் படுத்தப்பட்ட ஆண்டு 15.8.1972

★ இந்தியாவின் முதல் ஜெனரல் போஸ்ட் ஆபிஸ் அமைக்கப்பட்ட இடம் – சென்னையில் 1786 ஜூன் 1ம் தேதி திறக்கப்பட்டது.

★ இந்தியாவில் தபால் அலுவலகங்கள் குறைவாக உள்ள மாநிலம் – சிக்கிம்.

★ இந்தியாவில் தபால் அலுவலகங்கள் அதிகமாக உள்ள மாநிலம் – உத்திரப்பிரதேசம்.

★ இந்தியாவில் தபால் நிலையங்கள் எண்ணிக்கை – 1,44,875.

★ தபால் தலையில் முதன்முதலாக அச்சடிக்கப்பட்டவர் – மகாத்மா காந்தி.

★ தபால்தலையில் முதலில் அச்சடிக்கப்பட்ட பெண்மணி – விக்டோரியா மகாராணி.

– G.S. பாலசுப்பிரமணியன், II B.Sc., (Physics)

## நோபல் பரிசு பெற்ற இந்தியர்கள் !

| | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| 1. | இரவீந்திரநாத் தாகூர் | இலக்கியம் | 1913 |
| 2. | சர்.சி.வி. இராமன் | இயற்பியல் | 1930 |
| 3. | ஹர்கோபிந்த் கொரானா | உடற்கூற்றுஇயல் | 1968 |
| 4. | அன்னை தெரசா | சமாதானம் | 1979 |
| 5. | சந்திரசேகர் | இயற்பியல் | 1983 |
| 6. | அமார்த்தியா சென் | பொருளாதாரம் | 1998 |

அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

– திருக்குறள்.



✧ புலன்களை ஒவ்வொன்றாக அடக்கு.

# THE REVIEW OF INDIAN CONSTITUTION

- **P. Gomathinayagam,** Head, Department of History, Rajapalayam Rajus' College, Rajapalayam.

A constitution is a collection of basic principles and rules concerned with the governance of a state. It states what a state is what it should do and what it should not. The idea of constitutinalism is western by birth and practice. The British introduced the idea in India by passing the regulating Act of 1773 which was followed by a series of Acts. In the midst of the struggle for Freedom in India, the British were forced to grant constitutional concessions to reduce the heat generated by the agitations. At last when they decided to leave, the cabinet mission suggested with vision to create a Constituent Assembly to draft a constitution for India. The Indian constitution is fifty years old with as many scars all over its body and face. The political surgeons of present day suggest for plastic surgery to rectify the scars created by the surgeons of the yester years. In the new milleneium the review of Indian constitution has become an important policical and constitutional issue.

**INHERITED DEMERITS :**

The Indian constitution has inherited some defects. First of all, the Constituent Assembly which drafted it, was not a truly representative body. It was not elected on the basis of universal adult franchise. It reflected the British idea and attitudes. The Constitdent Assembly was dominated by English educated lawyers. The urge in the minds of the framers of the constitution to include every thing that seemed to be good in other constitutions of the world compelled them to cull out so many different features from different consitutions of the world and earned the name a rag bag of borrowing to the Indian constitution. So the Republic started to function with a constitution borrowed by representatives who were not elected at people's will. The framers treated the Government of India Act 1935 as one of the important sources of the republican constitution. While this Act was passed by the British Parliament, it received bitter criticism by the congress leaders. It is an irony of fate that it became an important source for the new constitution. The British Ghost haunted the Constiuent Assembly when it was seriously engaged in drafting the constitution. It could have been easer if the framers had opted either British or American model. But they decided to opt certain fetures in both the systems.

**Inadequacies of the Consititution :**

The elephantine Indian constitution has 395 articles and 12 schedules. But, inspite of its size, there are inadeqeacies and ambiguity on many matters. The constitution says about the right of minorities. But there is no clear definition of the word minority. The constitution provides for fundemental rights. There is a provision for the protection of these rights through consititutional remedies. But the constitution is silent over the amendability of this part of the consitution. In fact, there had been different cases in the apex court over the right of the parilament to amend part III of the constitution. The apex court itself has given different judegements over this question. There are still doubts over some of the powers of the Indian president. There are many doubts regarding the position and powers of the office of the Governor. Some of the political parties have gone to the extent of demanding the abbilition of the post itself. Article 356 has become the most controversidial article in the constitution. It has been used for more than hundred times in a period of fifty years. It has been righly pointed but that it has been used for political ends of the ruling party at the center. The constitution is silent over any possibility of total revision of the consitution. It does not say

wether the constitution could be revised totally or not. It is also not clear wether the Parliament which is a legislative body itself could become the constituent body and enact a new constitution.

## Spate of amendments

It is generally said that a federal constitution should be rigld. But, the Indian constitution is more flexible than rigld. The method of amendment presceibed in article 368 is not very difficult. This fact is demonstrated by the spate of amendments made in the fifty years and their impact on the fate of the constitution. There have been so many additions and ommissions. The most controversial 42nd amendment was made in 1976. It was more or less like a mini constitution. It thouroughly changed many of the aspects of the original constitution. It was branded as politically motivated amendment made to suit the whims and fancies of the people in power. Some of the important changes made by the 42nd amendment were again changed by subsequent changes. The 42nd amendment also auded two ambiguous terms namely Socialist, secular. In a period of fifty years, the constitution has been changed beyond recongnition by the 78 amendments made.

The state legislatures have no right to initiate a constitutional amendment. On some important matters, the approval of atleast half of the state legislatures is essential. But this provision has also become a farce, due to the multiplication of states. At present a group of smaller states like Arunachal Pradesh, Assam, Himachal Pradesh, Manipur, Meghalaya, Tripura, Nagaland, Mizoram Jammu and Kashmir, Goa, Sikkim, Kerala, and Haryana could prevent the will of the bigger states like U.P., M.P., Andhra Pradesh, Maharashtra, Bihar, Tamil Nadu and West Bengal which may constitute a major portition of the Indian territory and population. There is the possibility of the birth of five more smaller states in the near future which would go in the way of helping the smaller states in this regard.

The amendments made so far have altered many articles. They have added some clauses and omitted some of the original clauses. Section IV A of the constitution is a decorative addition of fundamental duties which are neither obligatory on the part of the people nor enforceable by the state. Almost all the parts of the constitution have been altered. Part I has been amended for three times. Atleast 22 changes have been made in part III which contains the fundemental rights. Part IV has been modified by six amendments and part IV has faced about fifty changes made by different amendments. Parts such as VII and IX have been repealed. Some of the changes made have little impact while some of them are of great signficance. There are some temporary provisions in the constitution which have become more or less permanent. For example, article 370 on Jammu and Kashmir is only a temporary provision. But it is not easy to think of its repeal.

## Implication of the review

The President of India has appointed a committee to review the constitution of India. This has generated much hue and cry in the country. There has been much criticism against any review. In fact, the congress party was mainly responsible for so many amendments made in the constitution. It was Mrs. Indira Gandhi who caused the enactement of the 42nd amendment for narrow policical purposes. Now it is said that any attempt to review the constitution would affect its sanctity. No constitution could be static. It is only an instrument of democracy which has to accommodate changes with the changing ideas of the people. The French have their fifth Republican constitution. In Switzerland, a total revision of the constiution is on the way. It may not be wrong to review the constitutional document and to make necessary changes. But, the present political condition in the country points out the fact that it would be just like openning Pandora's box.

## A BIG IF AND MANY BUTS

If an attempt is made for a total revision of the constitution what will happen? It is an interesting question to be probed before thinking

of an attempt for total revision. We have to think about the bimming political and constitutiional issues.

Any revision is to be a change towards better. A total change of the preambe itself could create heated claims ahd counter claims. The revisionist have to clearly define the words socialist and secular in the preamble. Any definition to be offered by the proponents of Hindutva would be stoutly opposed by the so called secular parties and the minorities. The fate of the term socialist also will be the same. There is a convenience in the present condition of ambiguity.

There are political parties which have raised their voice for state autonomy. It is beyond doubt that Indian federalism is half baked. Definitely there will be a strong demand for decentralisation of powers. The experiences of yester years would instigate the regional parties to demand drastic changes in division of powers.

Part XVII of the present constitution is also a bone of contention. The Hindi fanatics would demand for declaration of Hindi as the only official language of India. They would make a vociferous Swadashi demand to denounce the wideshi English while the non-hindi speaking people would stoutly oppose such a move. Already some of the regional parties have started to claim status of official language to many languages. There is a demand to declare all the languages in the VIII schedule as Difficial languages.

There is also the danger to be posed by some of the temporary provisions. There may also be demands to make reservation of seats for SCs and STs in the Parliament and state legisiatures a permanent feature. The question of uniform civil code may also assume great dimension.

**POLITICAL STATES :**

The idea of review of the constitution has been mooted out by the BJP. Vajpayee, the Prime Minister of India has declared the move an executive action. He has suggested for the review to make constitutional provision to ensure statbility of Governments at the states and the center. The second reason quoted by the Prime Minister is to expedite the socio-economic development. It has been categarically declared that there wont be any effort to change the basic features of the constitution. Though the Prime Minister has clearly declared the intention of appointing a committee to review the constitution the opposition parties express their contention of a hidden agenda behind this move. The suspicion is justified by some of the utterances of those who are near to the Prime Minister. L.K.Advani has openly advocated for the adoption of presidential system. The Sangh Parivar has always doubted the Indian constitution inadequate and unsuitable. The opposition parties blame the Government for its failure to consult them in this regard. A move to review the constitution it to be done on national concensus. Now it has become imperative to the ruling BJP to proceed with the idea of constitution review and it has become expedient to the opposition parties to object the proceedings. The political parties have their clearly indentified political stakes.

**CHALLENGED FOR CHANGES :**

To think constitutional changes is not a stn. Even to think of a change over to residential system is not an unpardonable sin. In a democracy, every citizen could suggest ideas for changes. The switch over to presidential system was once suggested by Mrs. Indira Gandhi. Pertinent and perturbing question is what is to be changed? By recollecting the words of Dr. B.R.Ambedkar, K.R. Narayanan the Indian President has pointed out that it is not the constitution that has failed us but it us who have failed the constitution. Good people could run a Government in a better way even with a bad constitution and bad people could not run a Government in a better way even with a good

constitution. Hence the validity of the argument in favour of changing the constitation is questioned.

Vajpayee has assured that there wont be any altempt to change the basic structure the constitution. Justice Venkatachaliah, the Chairman of the review committee has accepted the assignment only on the assurance that there won't by any attempt to change the basic features of the constitution. Besides, it is not so easy to bring or for the significant changes. The BJP could not get through amendment bills passed in the parliament with the support of required special majority. It has to seek the full-fledged support of its allies. Every political party will make a through analysis before taking a decision to support any change. Again, the congress party enjoys majority in the Rajya Sabha. It will not be to easy for the BJP to get any bill ratified by atleast thirteen state legislatures. Even if all the above hurdles are easily cewssed over by the Government, there hangs the sword of Domocles in the form of Judical review. The apex court has already established in the Kesavanada case that certain basic features of the constitution could not be changed by the parliament through any constitution amendment.

An impartial assessment of our constitution as a document would reveal the fact that there are incidequacities and ambiguties. An estimation of its operation in the past fifty years would also reveal the fact the constitution could be misused. It is certain that it is necessary to change certain things and it is not necessary to chantain things. The review of the constitution is a matter of vital importance. The committee has been given one year to look into the issue. The report of the committee should be published and discussed elaborately. The public should be given an opportunity to express their opinion on the report. It should be an attempt to review and not to revise. It should be an effort to tinker and not to tamper. In should be an exercise for renovation and not remunciation. It is to be remembered that maladies of Indian democracy could not be cured by pilis or bills of constitutional amendment. The defect lies not in statutes but in the statures of the leaders and the lead. You will get what you deserve. This maximum is right in a democracy. To make the constitution good have good leaders. To have good leaders be good people.

***

* Give everyman thy ear but few thy voice
  Take each man's censure but reserve
  thy judgement
  Costly thy habit as thy purpose can buy
  But not express'd in fancy, rich, not gandy
  For the appared off proclaims the man

# COMPUTER SCIENCE




Shri G.Sathana Krishnan - NIIT Lectures on "COBRA - an overview"




Contest inaguration by Mr. R.Suresh, Head, Dept. of Comp. Science




Mr. K.Parthasarathy, M.Tech., Scientist, ISRO demonstrates



SFR College Student's Participation



Students Enjoying the show




Prize recd. by SFR College Student

# துகிலியற் துறை



சிறுதொழில் பயிற்சி முகாமில் முதல்வர் உரை



திரு G. சந்தான கிருஷ்ணன் NIIT உரை




கருத்தரங்கில் திரு G. இராதாகிருஷ்ணன்



கருத்தரங்கை சிறப்பு விருந்தினர் பார்வையிடுதல்




கருத்தரங்கில் திரு A. சந்தானம், தரணி கெமிக்கல்ஸ்




மலரை கல்லூரி செயலர் வெளியிடுதல்

# இயற்கைச் சாயம்

இல. அங்கையர்க்கண்ணி, தமிழியல் துறை விரிவுரையாளர்

**முன்னுரை :**

ஆள் பாதி, ஆடை பாதி என்பது சான்றோர்களின் பொன் வாக்கு. இன்றைய நாகரீக உலகிற்கு ஒரு மனிதனை மேம்படுத்திக் காட்டுவது அவனுடைய ஆடையே. அந்த ஆடை தயாரிப்பதற்கு இயற்கை இழைகளும், செயற்கை இழைகளும் பயன்படுகின்றன. மற்றும் அவற்றிக்கு வண்ணம் கொடுக்க இயற்கைச் சாயமும், செயற்கைச் சாயமும் பயன்படுகின்றன.

தற்போது செயற்கை சாயங்களின் உற்பத்தியில் சுமார் 50 சதவீதம் சாயங்கள் மனிதர்களுக்கு உடல் நலக்கேடு (கன்சர், தோல் வியாதி, அலர்ஜி போன்றவை) விளைவிக்கக் கூடியவை என்று கண்டறியப்பட்டுள்ளது. இதனால் மனித நலத்திற்கு உகந்ததும், சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்காததுமான இயற்கைச் சாயங்கள் பயன்படத் துவங்கியிருக்கின்றன, மீண்டும் புதுப்பிக்கப்படுகின்றன.

**இயற்கைச் சாயங்கள் :**

இயற்கையின் வளர்ச்சியான பூ, இலை, தண்டு, பழம், வேர், நார், பழத்தோல் மற்றும் இறந்த பூச்சிகளிலிருந்து எடுக்கப்படும் சாயங்கள் இயற்கைச் சாயங்கள் ஆகும். இயற்கைச்சாயங்களில் முதன்மையானது இண்டிகோ (INDIGO) ஆகும். பண்டைக்கால வரலாற்றில் இந்தியாவுடன் வாணிபம் செய்த அரபுநாட்டினர் அவுரிச் செடியிலிருந்து எடுக்கப்பட்ட சாயத்தைச் சாயமேற்றவும் ஆயுர்வேதப் பொருட்களுக்கும் பயன்படுத்தினர். இன்றும் அழியாமல் உள்ள உடல்களான மம்மிகள் (MUMMY) இண்டிகோ சாயம் ஏற்றப்பட்ட துணிகளால் பாதுகாக்கப்பட்டவை ஆகும்.

இது தவிர வெங்காயத்தோல், பீட்ரூட், தேயிலைத் தூள், செம்பருத்திப்பூ, காட்டாமணக்கு, மஞ்சள், தேக்கு இலை, தேங்காய் நார், வேலம்பட்டை, காக்கட்டான், சாக் (பூச்சி), ஒட்டுப்பட்டை, செவ்வந்திப்பூ, பாரிஜாதப்பூ, மருதாணி, மாதுளை மற்றும் பல வகையான தாவரங்களில் இருந்து 250 இயற்கைச் சாயங்கள் துணி மற்றும் உணவுப் பொருட்களுக்கும் சாயமேற்றவும் பயன்படுத்தப்படுகின்றன.

**துணிகளில் சாயமேற்றும் தன்மை :**

இயற்கைச் சாயங்களைப் பொறுத்த வரையில் வண்ண அழுத்தம் (ஷேட்) சீராயிருப்பதில்லை. சாயம் பிடிப்பதைக் கெட்டியாக்குவதும், சாயம் தொடர் உற்பத்தியில் ஏற்படும் சிக்கல்களும் பெருங்குறைகளாகவே உள்ளன. இதனால் சமீப காலம் வரை இயற்கைச் சாய உற்பத்தி பெரிய முன்னேற்றம் காணவில்லை. தற்போது நீண்ட ஆராய்ச்சிக்குப் பிறகு துணி, மருந்து, அலங்காரப் பொருள்கள் மற்றும் உணவுப் பொருட்களுக்கு உகந்த பலவித நிறம் தரும் இயற்கைச் சாயங்களை பிரித்தெடுக்கும் முறை மற்றும் சாயமிடும் முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**சாயம் பிரித்தெடுக்கும் முறை :**

பொருளைத் தண்ணீருடன் கொதிக்க வைத்து, பின் பெரிய பாத்திரத்தில் உலர வைத்தால் கிடைக்கும் திடப்பொருள் சாயம் ஆகும். நமக்கு 1.5 – 2% வரை சாயம் கிடைக்கும்.

**சாயமிடும் முறை :**

இழைத் துணியுடன் சாதாரண சாயமிடும் முறைப்படி சாயமிடப்படுகின்றன.

**நிறங்கள் :**

சிவப்பு, மஞ்சள், காவி, கருப்பு, இண்டிகோ, சிவந்த பழுப்பு, பழுப்பு மஞ்சள் போன்ற நிறங்கள் கிடைக்கின்றன. இயற்கை சாயத்தில் வினை புரியும் சாயங்கள் மற்றும் பளிச்சிடும் சாயங்கள் கிட்டுவதில்லை.

**முடிவுரை : இயற்கை சாயங்களின் தன்மைகள் :**

1. அனைத்து இழைகளுக்கும் சாயமிடலாம். 2. சுற்றுப்புறச்சூழலுக்கு கேடு விளைவிப்பதில்லை. 3. குறைந்த விலையில் சாயமிடலாம். 4. நிறம் என்றும் பொலிவுடன் இருக்கும். 5. எளிதில் சாயமிடலாம்.

மேலும் நாம் இயற்கைச் சாயம் தரும் பொருளின் தேர்வு, சாறு வைக்கும் முறை, வண்ண அழுத்தம் வேறுபாடு இல்லாமல் சாயமிட, வண்ண அழுத்தங்கள் அதிகரிக்கவும் ஆராய்ச்சி முறைகளை மேற்கொண்டு வெற்றி பெற்றால், இயற்கைச் சாயம் வெற்றி பெறுவது உண்மையே.

* * *

## தமிழ் மன்றம்



[illegible]




[illegible]



[illegible]

## ROTRACT CLUB




Installation Ceremony by Rotract President
G. Roja Narayanasinga Raja




Science Day Celebration



Sappling Plant by Rtn. Muthu Subramanian

# "சுதந்திரதேவி ! நின்னை தொழுதிடல் மறக்கிலேனே !"

– டாக்டர். வீ. வெங்கட்ராமன், எம்.ஏ., எம்.பில்., பி.எச்.டி., ராஜுக்கள் கல்லூரி



மகாகவி பாரதியார்

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் எத்தனையோ தேசியக் கவிஞர்கள் தொண்டாற்றியுள்ளனர். அவர்களில் மிக முக்கியமானவர்களாக இன்றளவில் கருதப்படுபவர்கள் மகாகவி பாரதியும், ரவீந்திரநாத் தாகூருமே ஆவார்கள். பாரதியையும், பாரதியின் பாடல்கள், கதை மற்றும் கவிதைகளையும் சுமந்து கொண்டு இன்று வரை எத்தனையோ ஆய்வுக் கட்டுரைகளும், புத்தகங்களும் நம்மிடையே தவழ்ந்து கொண்டிருக்கின்றன. இன்றும் பாரதியைப் பற்றி ஆராய்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். பாரதியைப் பற்றி எழுதும் ஆராய்ச்சியாளர்களுக்கு "பாரதி எழுத்தாளர்கள்" என்ற சிறப்பு அடைமொழியும் உண்டு. பாரதியின் வாழ்க்கை மற்றும் சுதந்திர போராட்ட காலங்களில் அவரது பயணங்களையோ எழுதுவது இக்கட்டுரையின் நோக்கமல்ல. பாரதி இறந்து ஏறக்குறைய ஏழு ஆண்டுகள் கழிந்த பின்னர் நடைபெற்ற ஒரு அரசியல் கொந்தளிப்பில் பாரதியின் பங்கினை அதாவது பாரதி இறந்த பின்னர் அவரது தேசபக்தி பாடல்கள் பிரிட்டிஷ் அரசால் தடை செய்யப்பட்டது தொடர்பான ஆய்வே இக்கட்டுரையின் சாராம்சமாகும். "தனிக்தொரு மனிதனுக்கு உணவில்லையெனில் இச் ஜகத்தினை அழித்திடுவோம்" இதுதான் பாரதியின் கடைசி கால ஏன்! கடைசி பாடல்களாக இருந்திருக்கும் என பல பாரதி எழுத்தாளர்கள் கூறியிருக்கின்றனர். பாரதியின் "தேசபக்தி" யானது அவரது கடைசி காலக்கட்டங்களில் "மனித நேயம்" என்ற கோட்பாட்டில் வந்து சேர்ந்திருப்பதை இவ்வரிகள் மூலம் நம்மால் காண முடிகிறது.

1921ம் ஆண்டு செப்டம்பர் 11ம் தேதி பாரதி காலமான பின்னர் பாரதியின் துணைவியார் செல்லம்மா பாரதியால், பாரதியின் பாடல்கள் அடங்கிய புத்தகங்கள் மறுபதிப்பு உரிமைக்காக பண்டிட் ஹரிஹர சர்மா என்பவருக்கு அளிக்கப்பட்டது. அதன்படி 1922ம் ஆண்டு பண்டிட் சர்மாவால் திருவல்லிக்கேணி பாரதி ஆஸ்ரமத்தில் வைத்து பாரதியின் "தேசபக்தி பாடல்கள்" அடங்கிய ***சுதேச கீதங்கள்*** இரண்டு தொகுப்புக்களாக வெளியிடப்பட்டது. சுதேச போராட்ட காலக் கட்டங்களில் குறிப்பாக 1907ம் ஆண்டு பாரதியால் எழுதப்பட்ட ***"சுதேச கீதங்கள்"*** என்ற தொகுப்பில் அடங்கிய தேசபக்திப் பாடல்களும், 1908ம் ஆண்டு சென்னையில் வைத்து வி. கிருஷ்ணசாமி ஐயங்காரின் உதவியுடன் வெளியிடப்பட்ட ***"ஜன்ம பூமி"*** யில் தொகுக்கப்பட்ட பாடல்களையும் சேர்த்து பண்டிட் சர்மாவால் ***"சுதேச கீதங்கள்"*** என்ற தலைப்பில் இரண்டு பாகங்களாக வெளியிட்டார். பாரதியின் தேசபக்தி பாடல்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் பண்டிட் சர்மா வெளியிட்ட இவ்விரு புத்தகங்களில் ஒட்டு மொத்தமாக 54 தேசபக்தி பாடல்கள் இடம்பெற்றிருந்தது. 1928ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ம் தேதி பாரதியின் தேசபக்தி பாடல்கள் அடங்கிய இரு புத்தகங்களும் பர்மாவில் வைத்து பிரிட்டிஷ் அரசால் குற்றவழக்குச் சட்டம் (Criminal Procedure Code of 1898) அதனுடைய பிரிவு 99–ஏ ன்படி இப்பாடல்களில் பிரிட்டிஷ் அரசிற்கு எதிரான விஷயங்களிருப்பதாக பர்மா சி.ஐ.டி.பிரிவினர் அவற்றினை பறிமுதல் செய்து பிரிட்டிஷாரின் பர்மா அரசால் தடை செய்யப்பட்டது. பாரதியின் ***சுதேச கீதங்கள்*** பாகம் 1–2 இவை இரண்டும் 1923ம் ஆண்டு சென்னையிலிருந்து பர்மா வாழும் தமிழ் மக்களுக்காக விற்பனைக்கு அனுப்பப் பட்டிருந்தது. பர்மாவில் வாழும் தமிழர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலும் பாரதியின் புத்தகம் "வீட்டுப் பொருள்களாக" (House Hold Product) இருந்தது. பாரதியின் தேசப்பக்திப் பாடல்களை படித்து விட்டுதான் பர்மாவில் தமிழ்த் தேசியவாதிகள் பிரிட்டிஷ் அரசினை எதிர்த்து போராட்டங்களை நடத்துகின்றனர்

ன பிரிட்டிஷ் அரசின் தமிழ் மொழி பெயர்ப்பாளரின் பரிந்துரையின் பேரில் பர்மா அரசு அவற்றின் மீது தடை விதித்தது. பாரதியின் பாடல்கள் 1907ம் ஆண்டிலிருந்தே பர்மா மக்களிடையே இருந்து வந்தது. பாரதியார் ஒவ்வொரு முறையும் தனது புத்தகங்களை பர்மாவிற்கு அனுப்பி வைத்துக் கொண்டிருந்தார் எனவும் தனது நண்பர் மூலம் பாரதிக்கும் பர்மா தமிழர்களுக்கும் எப்பொழுதுமே நல்ல தொடர்பு இருந்து வந்தது என்பது பாரதியின் வாழ்க்கை சரித்திரத்தில் காண முடிகின்றது.

பர்மாவில் தடைசெய்யப்பட்ட பாரதியின் தேசப்பக்தி பாடல்கள் அடங்கிய ஒரு தொகுப்புடன் பர்மா அரசு ஏனைய பிராந்திய பிரிட்டிஷ் அரசுகளுக்கும் தெரியப்படுத்துவதுடன் மட்டுமல்லாமல் அந்த மொழி சார்ந்த பிராந்திய அரசு உடனடியாக அந்தப் புத்தகங்களை பறிமுதல் செய்ய வேண்டும் என்ற தங்களது பத்திரிக்கைச்சட்ட நடவடிக்கையின் படி பர்மா அரசால் தடை செய்யப்பட்ட ஆணை சென்னை மாகாண அரசிற்கு தெரியப்படுத்தியதும், சென்னை அரசு அதனை 1928 செப்டம்பர் 3ம் தேதி புனித ஜார்ஜ் கோட்டை கெஜட்டில் பதிவு செய்து 11ம் தேதி மக்களுக்கு தெரியப்படுத்தியது. தடைச்சட்டத்தின்படி சென்னை மாகாண தலைமை நீதிபதி (Chief Presidency Magistrate) செப்டம்பர் 19ம் தேதி சென்னை போலீஸ் தலைமை அதிகாரிக்கு ஆணை பிறப்பித்து உடனடியாக "பாரதியின் தேசபக்தி பாடல்கள் மாகாணத்தில் எங்கெல்லாம் விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றதோ அவைகள் அனைத்தையும் பறிமுதல் செய்ய வேண்டும்" என்று ஆணை பிறப்பித்தார். நீதிபதியின் ஆணையின்படி சென்னை போலீஸ் செப்டம்பர் 20ம் தேதி போலீஸ் உயர் அதிகாரி துரைச்சாமி பிள்ளையின் தலைமையில் போலீஸ் படையினை தயார் செய்து எங்கெல்லாம் பாரதியின் இப்புத்தகங்கள் விற்பனை செய்யப் படுகின்றன என கண்டறியவும், அவ்விடங்களில் சோதனை செய்யயும், பறிமுதல் செய்யவும் ஆணை பிறப்பித்தது. அதன்படி போலீஸ் படை சென்னையில் உள்ள பாரதி பிரசுராலயம், ஹிந்தி பிரச்சார சபா மற்றும் என். தனபாண்டி & கம்பெனி ஆகிய இடங்களில் சோதனை செய்தது. சோதனையில் பாரதியின் தேசப்பக்தி பாடல்களின் 2000 பிரதிகளை பறிமுதல் செய்தது. இப்புத்தகங்களின் பதிப்புரிமை பெற்றிருந்த பண்டிட் சர்மாவிடம் வாரண்ட் கொடுக்காமல் சோதனை செய்ததும், பறிமுதல் செய்ததும் அவருக்கு எதிர்பாராத ஒன்றாக இருந்தது. பண்டிட் சர்மா இந்த நடவடிக்கைகளைக் கண்டு மனம் நெகிழ்ந்தார். பாரதியின் பாடல்களுக்குத் தடை செய்யப்பட்ட செய்தி மாகாணமெங்கும் காட்டுத்தீ போல் பரவியது. பாரதி இறந்து ஏழு ஆண்டுகள் கழித்து அவரது பாடல்களுக்கு தடை செய்ய வேண்டிய அவசியம் ஏன் வந்தது ? என்ற விந்தையில் மக்கள் முழு மனதுடன் போராட்டத்தில் இறங்கலாயினர்.

### பத்திரிக்கைகள் எதிர்ப்பு :

சென்னை மாகாணத்திலிருந்து வெளிவந்த அனைத்து மொழி வாரி தேசிய பத்திரிக்கைகளும் பிரிட்டிஷ் அரசின் இந்நடவடிக்கையினை கடுமையாக விமர்சித்தன. அவற்றுள் ***சுதேசமித்ரன், தேசபக்தன், காந்தி, நவசக்தி, தமிழ்நாடு, ஆந்திரபத்ரிகா*** போன்ற தமிழ், தெலுங்கு பத்திரிக்கைகள் பல நாட்களாக "பாரதிக்குத் தடை" என்ற தலைப்பில் கட்டுரைகளும் செய்திகளையும் வெளியிட்டு மக்கள் மனதில் சுதந்திர வேட்கையினை எழுப்பியது. அதேபோல் ஆங்கில தேசிய நாளிதழ்களான ***இந்து, சுயராஜ்யா, நியூ இந்தியா*** போன்ற பத்திரிக்கைகளும் பிரிட்டிஷாரின் தடையுத்தரவினை எதிர்த்து மக்களுக்கு செய்திகளை வரலாற்று ரீதியாக எடுத்துரைத்தது. அனைத்து பத்திரிக்கைகளின் ஒருமித்த கருத்தாக "பாரதி பாடல்கள் மீதான தடையுத்தரவு என்பது ஞாயத்திற்கும் நீதிக்கும் புறம்பானது" (Unjust and illegal) என்றும், பாரதியின் தேசப்பற்றினையும் அவரது புகழினை அழிக்கும் எண்ணத்துடன் எடுக்கப்பட்ட முடிவு என அரசினை எச்சரித்தது. ***இந்து*** பத்திரிக்கை தனது 1928 செப்டம்பர் 25ம் நாள் இதழில் "பிரிட்டிஷ் அரசின் இச்செய்கை விதி விலக்கான ஒன்று" (Anomalous one) ஏனெனில் இப்புத்தகங்களில் எடுத்துரைக்கப்பட்ட தேசபக்தி, இருபது ஆண்டுகளாக மக்கள் மனதில் வேரூன்றியுள்ள ஒன்று, இதனை தடை செய்ய வேண்டிய அவசியம் அரசிற்கு இல்லை. பர்மா அரசு தடை செய்ததை சென்னை அரசு தனது கெஜட்டில் பதிவு செய்து மறு உத்தரவு மட்டும் பிறப்பித்தால் போதுமானது என்று தலையங்கம் எழுதியது. அதே போல் ***நியூ இந்தியா***வின் செப்டம்பர் 25ம் தேதி தலையங்கத்தில் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தினை குற்றம் சாட்டிவிட்டு, "இது மாற்றவே முடியாத, குணப்படுத்தவே முடியாத வியாதி, பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் மனதிற்கு மட்டும்தான் இப்பாடல்களில் தேச விரோதம் கண்டு பிடிக்க முடியும்" சென்னை அரசு பர்மா அரசின் பிரதிபலிப்பாக

தடையினை ஏற்படுத்தி மக்களிடையே பல ஆண்டுகளாக இருந்த தேசப்பற்றினை உரசி அதன் மூலம் மக்கள் மனதை புண்ணாக்கிவிட்டது என எழுதியது. சுயராஜ்யாவின் தலையங்கத்தில் "இந்த அரசின் விரோதப்போக்கு மென்மேலும் பாரதிக்கும், பாரதியின் தேசபக்திப் பாடல்களுக்கும் மரியாதையும் புகழினையும் தேடிக்கொடுக்கும்" என எழுதியது. பண்டிட் சர்மா, பாரதியின் பாடல்களின் பதிப்பாளர் என்ற முறையில் அவர் பர்மா, சென்னை அரசுகளின் மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர மனு ஒன்றினை தாக்கல் செய்தார். அதில் தனது பதிப்பகத்தில் சோதனையிடவும், பறிமுதல் செய்யவும், போலீஸ் மூலமாகவோ, நீதி மன்ற வாரண்டோ பிறப்பிக்கப்பட வில்லை எனவும் தான் முறையாக பாரதி மனைவி செல்லம்மா பாரதியிடம் அனுமதி பெற்றுதான் பாரதியின் புத்தகங்களை வெளியிட்டிருப்பதாகவும், இச்செய்கையால் அக்குடும்பத்தாருக்கும், பதிப்பகத்தாருக்கும் மாபெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது என மனுவில் குறிப்பிட்டார்.

தடை செய்யப்பட்ட பாடல்களின் பொருள் :

பாரதியின் "தேசபக்தி பாடல்கள்" பகுதி 1, பகுதி 2 இவை இரண்டிலும் ஏறக்குறைய 54 தேசபக்தி பாடல்கள் இருந்தன. பிரிட்டிஷ் பர்மா அரசு பகுதி 1ல் 7 பாடல்களையும்,பகுதி 2ல் 1 பாடலையும் சேர்த்து மொத்தம் 8 தேசப்பக்தி பாடல்களை மட்டும் தேர்வு செய்து அவை அனைத்தும் "சட்ட விரோதமான மற்றும் பல பொருள்படும் வெவ்வேறு அர்த்தங்களை தரக்கூடிய" (Objectionable and ambigious) பாடல்களாக உள்ளன என முடிவெடுத்து தடை செய்திருந்தது. அவை, "**வந்தே மாதரம், சுதந்திரப் பள்ளு, பாரத சமுதாயம், அடிமை, ஆங்கிலேயன் ஒரு தேசப்பக்தனுக்கு கூறியது, தேசபக்தன் ஆங்கிலேயனுக்கு கூறும் மறுமொழி, பெல்ஜியத்துக்கு வாழ்த்து மற்றும் பாரத ஜனங்களின் தற்கால நிலைமை**" போன்ற பாடல் வரிகளில் மட்டும் தான் அதிகமாக சட்ட விரோத பிரிட்டிஷ் எதிர்ப்பு கருத்துக்கள் உள்ளன என பர்மா மற்றும் சென்னை அரசுகள் முடிவு செய்து தடை செய்தது. இப்பாடல்களில் உள்ள பொருள் அனைத்தும் தேசிய ஒற்றுமை, வந்தே மாதரம் பாடலை ஏன் பாட வேண்டுமென்ற பொருளினையும், சுதந்திர பள்ளுவில் இத்தலைவர்கள் சுதந்திரத்தினை அடைந்து விட்ட உற்சாகத்தில் ஆனந்தப் பள்ளு பாடுவது போல உள்ள கருத்துக்களும், இந்தியர்கள் பிரிட்டிஷ்காரர்களை விட தாழ்ந்தவர்களில்லை என்ற கருத்தினையும், பாரத சமுதாயத்தில் இந்தியர்கள் வெள்ளைக்காரர்களின் ஆணைகளை ஒரு போதும் ஏற்க வேண்டாம், 30 கோடி இந்தியர்கள் ஒன்றாக சேர்ந்தால் ஆட்டிப்படைக்கும் பரங்கி யரை நாடு விட்டு விரட்டலாம் எனவும், "வாழ்ந்தால் 30 கோடி இந்தியர்களாக வாழ்வோம், அல்லது செத்தாலும் 30 கோடி இந்தியர்களாவே சாவோம்" என்று மக்களிடையே ஒரு உணர்ச்சி பூர்வமான எழுச்சியினை ஏற்படுத்தும் கருத்துக்கள் காணப்பட்டது.

பாரதி தனது "அடிமை" மற்றும் "ஆங்கிலேயரின் தேசபக்தனுக்கு கூறியது" ஆகிய பாடல்களில் இந்தியர்களிடையே காணப்படும் ஜாதி வேறுபாடு, மத வேறுபாடு, இன வேறுபாடு போன்றவைகளை குறைகூறியே ஆங்கிலேயர்கள் நம்மை மதத்தின் அடிப்படையிலும், விதியின் அடிப்படையிலும் நம்மை பிரிக்கும் சூழ்ச்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளனர். மேலும் நமக்கு நாட்டையோ, நாட்டு மக்களையோ காக்கும் வலிமையோ, ஒற்றுமையோ நம்மிடையே இல்லை எனவும் அப்படியே இருந்தாலும் நாட்டை ஆளும் தகுதி இந்தியருக்கு கிடையாது என்று ஆங்கிலேயன் இந்தியர்களைப் பார்த்து ஏளனமிடுவதைப் போல் "அடிமை"யில் எழுதியுள்ளார். "ஆங்கிலேயன் இந்தியனுக்கு கூறியது பாடலில், பிரிட்டிஷ் கலெக்டர் வின்ஞ்ச்சுக்கும், வ.உ.சிதம்பரம் பிள்ளைக்கும் நடைபெற்ற உரையாடல் போல் இயற்றியுள்ளார். வ.உ.சி.யை பார்த்து ஆங்கிலேயன், "கப்பல் ஒட்டி எங்களை நாடுவிட்டு விரட்ட பார்க்கின்றாயோ அடிமையே உன்னை அழிக்கிறேன்" என்ற தொனியில் பாரதியால் எழுதப்பட்டது. அதாவது வ.உ.சி.யினை 40 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்ததும் பாரதி மனம் நொந்து இயற்றப்பட்ட பாடல் 1908ல் "ஜென்ம பூமி" யில் வெளிவந்தது. அப்பாடல் 1922ல் வெளியிடப்பட்ட தேசப்பக்தி பாடல்களில் ஒன்றாக இடம் பெற்றது.

பாரதியின் மற்றொரு பாடலான "தேசபக்தன் ஆங்கிலேயனுக்கு கூறும் மறுமொழி" என்ற பாடலில் வ.உ.சி. கலெக்டர் வின்ஞ்க்கு கூறும் பதிலடியாக "இந்தியர்கள் 30 கோடி ஜனங்களும் நாய்களா, பன்றிகளா அல்லது சேய்களா நீங்கள் (பிரிட்டிஷ்) மட்டும் மனிதர்களா என கேள்விக் கணைகள் தொடுப்பது போலவும், "எங்களது சதைகளை துண்டு



✧ செய்யும் ஒவ்வொரு செயலுமே ஒரு லட்சியமாக இருக்க வேண்டும்.

துண்டாக்கிலும் எங்கள் உடல் சாயாது, எங்கள் உயிர் போகாது" எங்கள், இதயத்திலுள்ள மஹாசக்தி எங்கள் குறிக்கோள் அடையும் வரை அழியாது ! எங்கள் நெஞ்சு வேகாது ! என எழுதியுள்ளார். பாரதி தனது "பெல்ஜியத்து வாழ்த்து" என்ற பாடலில் வலிமை வாய்ந்த உறுதியும் மனோதிடமும் கொண்டிருந்த பெல்ஜியமானது இங்கிலாந்துடன் சேர்ந்து கொண்டு போரில் ஈடுபட்டதும் அதன் மரியாதை இழந்து விட்டது. அதே போல் இந்தியர்கள் பிரிட்டிஷாரின் போர் நடவடிக்கையில் ஈடுபட்டு பெல்ஜியத்தினைபோல் பிரிட்டிஷ் காலடியில் வீழ்ந்து விடக்கூடாது என எழுதியுள்ளார். "பாரத ஜனங்களின் தற்கால நிலைமை" என்ற பாடல் வரிகள் அனைத்தும் பாரதியின் மனித நேயத்தின் மீதான ஆழ்ந்த சிந்தனையை காட்டுகிறது. தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்றவரிகள் பாரதியால் எழுதப்பட்டிருப்பது அவர் ரஷ்யப் புரட்சியினை மனதில் வைத்து எழுதப்பட்டிருப்பதை நம்மால் உணர முடிகிறது. மேலும் ***சுதேச கீதங்கள்*** பாகம் 2ல் உள்ள 50 பாடல்கள் 31வது பாடலாக இடம் பெற்றிருக்கும் ஒரேயொரு தேசபக்தி பாடல்தான் பாரதியின் கடைசிப் பாடலாக இருந்திருக்க முடியும் என பல பாரதி எழுத்தாளர்கள் கூறியிருக்கின்றனர். இவ்வாறாக பாரதியால் தீட்டப்பட்ட தேசபக்தியினை தூண்டும் வகையில் இயற்றப்பட்ட பாரதியின் ***சுதேச கீதங்கள்,*** பாரதி மறைந்து ஏழு ஆண்டுகள் கழித்து தடை செய்யப்பட்டது பிரிட்டிஷ் அரசின் விநோதமான மனப்போக்கினையே காட்டுகிறது.

**பாரதிக்கு எழுந்த மக்கள் எழுச்சி :**

"பாரதி பாடல்களுக்குத் தடை" என்ற செய்தியறிந்து சென்னை மாகாணத்திலும் குறிப்பாக சென்னை மற்றும் தென் மாவட்டங்களில் பாரதியின்பால் பற்றுள்ளவர்கள் அனைவரும் பிரிட்டிஷ் எதிர்ப்பு போராட்ட கூட்டங்களை ஏற்பாடு செய்து எதிர்ப்பு கோஷங்களையும், கண்டன அறிக்கைகளையும் விட்டனர். 1928 செப்டம்பர் 28ம் தேதி சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் வைத்து மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் போடப்பட்டது. அக்கூட்டத்தில் டாக்டர் பி.வரதராஜுலு நாயுடு, சி.என்.முத்துரங்க முதலியார், டி. குழந்தை, வி.லட்சுமண சாஸ்திரி, மயிலை ரத்ன சபாபதி முதலியார் மற்றும் ஈ. கிருஷ்ண ஐயர் போன்றோர் கலந்து கொண்டு பேசினர். ஈ. கிருஷ்ண ஐயர் தலைமை தாங்கி பாரதியின் பாடல்களை பாடிக்காட்டி ஆயிரக்கணக்கில் கூடியிருந்த கூட்டத்தினை மெய்மறக்கச் செய்தார். வி.எஸ்.சாஸ்திரி பேசுகையில் "பாரதியின் பாடல்களை அனைவரும் பாடி தெய்வீகமான பாரதியின் தேசபக்தி பாடல்களை புகழ் மணக்க செய்திடல் வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். டி.குழந்தை பேசுகையில் "பிரிட்டிஷ் அரசிற்கு நாம் ஒரு சரியான பாடத்தினை கற்பிக்க வேண்டும்" அதாவது "சைமன் கமிஷன்" வருகையினை எதிர்த்து சென்னை மாகாண மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு எதிர்ப்பதே நாம் பாரதிக்கு செய்யும் கடமையாகும் என பேசினார். சி.என்.முத்துரங்க முதலியார் பேசுகையில், "பாரதியின் தேசப்பக்திப் பாடல்களை தடை செய்வது பாரதியின் தேசப்பற்றிற்கு அநீதியானது, அவர் தாய் திருநாட்டின் விடுதலைக்கு அவர் பாடுபட்டதற்கு எதிரானது" என பேசினார்.

டாக்டர் வரதராஜுலு நாயுடு பேசுகையில், "பாரதி தனது தேச பக்தி பாடல்களின் மூலம்தான் இந்திய மக்களின் நெஞ்சங்களில் தேசபக்தியினை ஊட்டினார்". இன்னும் அவர் பாடல்களை நாம் பாடும்போது நமக்கு பாரதமாதாவின் நினைவு வருகிறதென்றால் அதற்கு காரணம் நம் பாரதியின் பாடல்களே ஆகும் என்றும் பாரதி, தன் பாடல்களால் இந்திய இளைஞர்களை தூண்டி விட்டு நாட்டின் விடுதலைக்கு யுகப் புரட்சியினை கொண்டு வர பாரதி விளைவியதும், 15 ஆண்டுகளுக்கு முன்னால் வெளிவந்த பாடல்களுக்கு இன்று இவ்விரு அரசுகள் தடை விதிப்பது ஏன்? என கோபக்கனலாய் பேசினார். அதோடு நிற்காமல் பிரிட்டிஷ் அரசின் உயர் பதவியிலுள்ள இந்தியர்களான வி.கிருஷ்ண ஐயர், பி.எஸ்.சிவசாமி ஐயர், கே.சீனிவாச ஐயங்கார், சி.பி. ராமசாமி ஐயர் மற்றும் ஜஸ்டிஸ் ஆட்சியில் உள்ளவர்களான முகம்மது உஸ்மான் மற்றும் கிருஷ்ணன் நாயர் போன்றோர்களை கடுமையாக குற்றஞ்சாட்டினார். இவ்விரு அரசுகள் தடை ஆணையை பாரதி பாடல்கள் மீது போடும் போது இவர்களெல்லாம் எங்கு சென்றனர். இவர்களது மனதிலும் பாரதி ஒரு துரோகியா? என கேள்விகளை எழுப்பி பேசினார். இதே போல் பொதுக்கூட்டங்கள் பல ஊர்களிலும், பகுதிகளிலும் தொடர்ந்து நடந்த வண்ணமாய் இருந்தது. அதேபோல் பத்திரிக்கைகளின் பல தலைவர்கள் தங்கள் எதிர்ப்புக் கருத்துக்களை வெளியிட்டனர்.

சி. ராஜகோபாலாச்சாரியின் கட்டுரை ஒன்று 1928ம் ஆண்டு அக்டோபர் 1ம் தேதி ***இந்து*** பத்திரிக்கையில் "பிரிட்டிஷ் அரசின் பொறுப்பு" (Government's

Responsibility) என்ற தலைப்பில் வெளியானது. அதில் பர்மா அரசினால் தடைசெய்யப்பட்ட பாரதியின் புத்தகங்களை சென்னையில் பறிமுதல் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் சென்னை அரசுக்கு கிடையாது. அப்படி செய்ய வேண்டுமெனில் பர்மா போலீஸ்தான் இங்கு செய்ய வேண்டுமேயொழிய, பர்மா அரசின் ஆணையை கண்டு சென்னை அரசு போலீசினை அனுப்பி பறிமுதல் செய்ய வேண்டி (Cr. P.C.) கிரிமினல் குற்றவியல் சட்டத்தின் உறுப்பு 99A அவ்வாறு கூறவில்லை என்றும், அதை விட சென்னை அரசின் செயல்பாடுகள் கேலிக்குரியதொன்றாக இருக்கிறது. ஏனெனில், சில மாதங்கள் முன்புதான் சென்னை அரசின் (ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியிலுள்ளபோது) கல்வி அமைச்சரால் பாரதியின் பாடல்கள் வாசிக்கப்பட்டு அதனை பாராட்டி "இவைகளனைத்தும் தமிழர்களின் சொத்துக்கள்" என்று சொன்னது மட்டுமல்லாமல் அவைகளனைத்தையும் பாடப்புத்தகத்தில் சேர்க்க வேண்டும் என்று பேசியவர் இன்று இத்தடையை பற்றி கண்டு கொள்ளாமலிருப்பது கண்டனத்துக்குரிய விஷயமாகும் என்று தனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

மற்றொரு தேசியவாதியான எஸ். சீனிவாச ஐயங்கார் இந்து பத்திரிக்கை செப்டம்பர் 30ம் தேதி பேட்டி கண்ட போது அதற்கு அவர் பதிலளிக்கையில் இது பிரிட்டிஷ் அராஜகப்போக்கின் ஒரு எல்லையாகும். பாரதி பாடல்களை தடை செய்தவர்கள் இடைக்கால காட்டுமிராண்டிகளுக்கு சமமானவர்கள். (Medieval Barberians Attitude) இந்திய கலாச்சார சுதந்திரத்தினை குழி தோண்டி புதைத்து விட்டனர். மக்களனைவரும் சென்னைக்கு வரவிருக்கும் சைமன் குழுவினை எதிர்ப்பதே நாம் பாரதிக்கு செய்யும் மரியாதையாகும் என்று அவர் பேட்டி அளித்தார். அவரது பேட்டி அக்டோபர் 1ம் தேதி இந்து பத்திரிக்கையில் வெளியானது. மற்றொரு பக்கம், பண்டிட் சர்மாவால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவினை நீதிபதியான ஜஸ்டிஸ் ஓட்சர்ஸ்ம், ஜஸ்டிஸ் பீல்லேயும் விசாரித்து மனுவினை டிசம்பர் 3ம் தேதி தள்ளுபடி செய்தனர். பண்டிட் சர்மாவிற்காக சென்னை பாஸ்யம் ஐயங்கார் வாதிட்டார்.

## சென்னை மாகாண சட்டமன்ற மேலவையில் நடந்த உரையாடல்கள் :

சென்னை சட்டமன்ற மேலவை 1928ம் ஆண்டு அக்டோபர் 8ம் தேதி முதல் 12ம் தேதி வரை கூடியது. முதல்வராக ஜஸ்டிஸ் கட்சியில் டாக்டர் சுப்பராயன் வீற்றிருந்தார். 9ம் தேதி சட்ட மேலவையில் உறுப்பினரும் காங்கிரஸ் தலைவருமான எஸ்.சத்தியமூர்த்தி அவர்கள் பாரதி பாடல்கள் தடை சம்பந்தமாக அவை ஒத்தி வைத்து பிரேரணை கொண்டுவந்தார். சத்யமூர்த்தி பேசுகையில், கடந்த சில மாதங்கள் முன்புதான் பாரதி பாடல்கள் ராஜ துரோகம் ஒன்றுமில்லை என்று கூறி அவற்றினை பள்ளி பாடத்திட்டத்தில் கொண்டு வரலாம் என அறிவித்து விட்டு திடீரென அவற்றினை தடை செய்வது அரசின் கையாலாகாத்தனத்தினையே காட்டுகிறது என்று பேசினார். சத்யமூர்த்தியின் கனல்கக்கும் பேச்சுகள் அவையினை ஸ்தம்பிக்கச் செய்தது. மேலும் அவர் பேசுகையில், முதலமைச்சர் தன் சகாக்களை கட்டுப்படுத்துவதில் அதிகாரம் இல்லாதவர் போல் காணப்படுவது இதிலிருந்து தெரிகின்றது. அவர் கடந்த மாதங்களில் சொன்னவற்றினை பார்க்காமல் தடைக்கு பரிந்துரை செய்த சட்ட உறுப்பினர் கிருஷ்ணன் நாயரின் இச்செயலால் அரசின் தவறான நிர்வாகப் போக்கினை காட்டுகிறது. பர்மா அரசு சொன்னது என்பதற்காக பறிமுதல் செய்யச் சொல்லும் வேகத்தினை பார்க்கும்பொழுது பிரிட்டிஷ் அரசின் காட்டுமிராண்டி நிர்வாகத்தினை எடுத்துக் காட்டுகிறது. பாரதி தப்பித்தவறி பிரிட்டிஷ் இந்தியாவில் பிறந்து விட்டார். அவரது எண்ணங்களுக்கு மேல் நாடுகளில் இருக்கின்ற மரியாதை அவர் பேசும் மொழி கொண்ட இம்மாகாணத்திலும், மாகாண அரசுக்கும் இல்லை என்பது மனவருத்தத்தினை தருகிறது. மேலும், அவரது பாடல்களினாலும் புத்தகங்களினாலும்தான் அவரது மனைவி மற்றும் இரண்டு பெண் குழந்தைகள் வாழ்ந்து வருகின்றனர். அது கூடவா பிரிட்டிஷ்காரர்களுக்கு தெரிய வில்லை. பின் பாரதியின் ஒவ்வொரு பாடல்களையும் வாசித்துக் காட்டி எதிரே அமர்ந்துள்ள ஜஸ்டிஸ் அரசின் முதல்வர் டாக்டர் சுப்பராயனைப் பார்த்து இப்பாடல்களை கேட்கின்றபோதும், பாடும் போதும், உங்கள் இதயம் துடிக்கவில்லையா? ரத்தம் கொதிக்கவில்லையா? என்று கேள்விக்கணைகளை எழுப்பினார்.

எஸ். சத்யமூர்த்தியினை தொடர்ந்து மற்ற அவை உறுப்பினர்களான சி.என்.முத்துரங்க முதலியார், யு.ஆதிநாராயண செட்டியார், டி.நாராயண ராஜு, ராம்நாத் கோயங்கா, சி.வி.வெங்கட்ரமண ஐயங்கார், சி.வி.அனந்தகிருஷ்ணன் ஐயர், டி.சி.ஸ்ரீனிவாச ஐயங்கார், டி.கே. சிதம்பர நாத முதலியார், எஸ்.கே.துளசிராம், டி.எம்.நாராயணசாமி பிள்ளை,

கே.வி.கிருஷ்ணசாமி நாயக்கர் மற்றும் பலர் பாரதியின் பாடல்களை பாடி காட்டியவாறும் அதில் உள்ள வரிகளை இந்தியர்கள் எப்படி மனதில் கொண்டு நாட்டு சுதந்திரத்திற்கு பாடுபட வேண்டும் என்றும் பாரதியினை ஷெல்லியின் பாடல்களுக்கும், வில்லியம் வேர்ட்ஸ்வொர்த்தின் பாடல்களினையும் ஒப்பிட்டு காட்டி பேசினார். அவர்களுள் ராம்நாத் கோயங்கா மட்டுமே வடமாநிலத்தவர். அவர் பேசுகையில், நான் எப்போதாவது ஒரு முறை பேசக் கூடியவன். நான் தமிழ் புலமை பெற்றவனும் கிடையாது. தமிழில் ஏ.பி.சி.டி. கூட தெரியாது. ஆனால் பாரதியின் பாடல்களையும் அதில் உள்ள அற்புதமான தேசபக்தியினையும் கேட்டவன், ஒவ்வொரு தமிழ் மாகாண மக்களுக்கும் இவைகள் பாரதி விட்டுச் சென்ற சொத்துக்கள், தமிழர்களுக்கே உரியது. மேலும் நானும் சென்னை ஹிந்தி பிரச்சார சபாவின் அங்கத்தினன். பாரதியின் புத்தகங்களை அச்சிடுவதற்கு இச்சபா உறுப்பினர்கள் ஒவ்வொரு வருடமும் பிச்சை கேட்டு வெளியிட்டுள்ளார்கள் என்பது எனக்கு நன்கு தெரியும். இன்று வரை ஏறக்குறைய ரூ. 2,000 நஷ்டமடைந்துள்ளார்களேயொழிய லாபம் அடைய வில்லை. ரங்கூன் அரசு தவறு செய்திருக்கலாம். ஆனால் பாரதி வாழ்ந்த தமிழ் மண்ணில் அவர் பாடல்களை தடை செய்வது தவறானதும் அநீதியும் கூட. நேற்று பிரிட்டிஷ் அரசின் ஆலோசனையின் பேரில் இந்த அரசு ரூ. 4,000 ஒதுக்கி தென்னிந்திய பறவைகளை பற்றிய புத்தகங்களை வாங்கி விவசாயிகளின் நலனுக்காக தர வேண்டும் என முடிவெடுத்தார்கள். இந்த ரூ 4,000 பணத்தை வங்கக் கடலில் வீசுங்கள்! அதை விடுத்து இந்த அரசின் மூலமாக பாரதியின் பாடல்களை அச்சிட்டு குறைந்த விலைக்குமில்லாமல் இலவசமாக அனைத்து மாணவர்களுக்கு கொடுத்தாலே போதும். நம் தமிழ் விவசாயிகள் பயனடைவார்கள் என நான் நம்புகிறேன். தமிழ் மாகாணத்தைச் சார்ந்த முதல்வர் டாக்டர் சுப்பராயனுக்கு இது கூட தெரியாதா! வடக்கு மாகாணத்தினை சார்ந்த நான் உங்களுக்குச் சொல்ல வேண்டுமா..!

"தலைவர் அவர்களே! இங்குள்ள அனைவரும் சதயமூர்த்தியின் பின்னால் உள்ளோம். அவரது வேண்டுகோளினைப்போல் நாங்களும் கேட்கிறோம்! உடனடியாக பறிமுதல் செய்யப்பட்ட பாரதியின் புத்தகங்கள் மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைப்புதே பிரிட்டிஷ் அரசிற்கும் இந்த அரசிற்கும் நல்லது. இதையே நான் என் சார்பாக எதிர்பார்க்கிறேன்" என்று ராம்நாத் கோயங்கா வாதிட்டார். கடைசியாக சி.வி.வெங்கட்ராம ஐயங்கார் ஒத்தி வைப்பு தீர்மானத்தை முன்மொழிய டாக்டர் சுப்பராயன் அனுமதியளித்தார். 67 பேர் இத்தீர்மானத்திற்கு ஆதரவாகவும், 12 பேர் எதிராகவும், 15 பேர் நடுநிலை வகித்தும் வெற்றி கண்டனர்.

**தடை நீக்கம் :**

சென்னை உயர்நீதி மன்றத்தின் ஆணைப்படி சென்னை மாகாண அரசு பர்மா அரசினை தொடர்பு கொண்டு பாரதியின் சுதேச கீதங்கள், பகுதி 1, 2 இவை இரண்டின் மீதான தடைகளை விலக்கிக் கொள்ள வேண்டியது. அதன் படி பர்மாக அரசும் அவசரத்தந்தி மூலமாக தடைகளை விலக்கிக் கொள்ளும் ஆணையினை 1929ம் ஆண்டு ஜனவரி 5ம் தேதி பர்மாவில் வெளியிட்டு, அவ்வாணையை சென்னை அரசிற்கு ஜனவரி 7ம் தேதி தெரியப்படுத்தியது. இவ்வாணைப்படி சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி சென்னை போலீசினை பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து பாரதியின் சுதேச கீதங்கள் புத்தகங்கள் (2000) மீண்டும் ஒப்படைக்க வேண்டி ஆணையிட்டது. அதன்படி பறிமுதல் செய்யப்பட்ட அத்தனை பாரதி புத்தகங்களும் பண்டிட் சர்மாவிடமும், ஹிந்தி பிரச்சார சபா, தனபாண்டி & கோவிடமும் ஒப்படைத்தது. பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட காலத்தில் இந்திய மக்களுக்கு கிடைத்த முதல் வெற்றியாகவும், பாரதியின் பாடல்களுக்கு சுதந்திரமும், பாரதியின் சுதந்திர பள்ளு மக்களிடையே மறுபடியும் ஆனந்தமாக பாடப்பட்டது என்பது பாரதிக்கும் சுதந்திரம் என்பதனையே காட்டுகின்றது. இன்றும் பாரதி நம்மிடையே ஒருவராகவும் அவரது பாடல்கள் ஒவ்வொரு இந்தியனின் வீட்டுப் பொருளாகவும் இருப்பது பாரதியின் பால் நாம் கொண்ட பக்தியையே காட்டுகிறது. பாரதி – ஏழு ஸ்வரங்கள் இணைந்த ஒரு சம்பூரண ராகம். ஆம்! பாரதி ஓர் அபூர்வ ராகம், அவன் ஒரு சங்கொலியின் நாதம்.

"என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம் ...!"

– பாரதி

***

❖ யாரும் செய்யாததை செய்வதே சிறப்பு.

# பனாமா கால்வாய் – ஒரு வரலாற்றுப் பின்னணி

ஜே. தர்மராஜ், M.A., (Hist) M.A., (Eco.) M.Phil., வரலாற்று விரிவுரையாளர் (தேர்வு நிலை)

முன்னுரை :

"1999ம் ஆண்டு டிசம்பர் மாதம் பனாமா கால்வாயை அமெரிக்கா பனாமா நாட்டிடம் ஒப்படைத்தது" – இது பத்திரிக்கையில் வந்த செய்தியாகும். பல செய்திகளுக்கிடையில் இதுவும் ஒரு செய்தியாக கடந்து போய் விட்டது. ஆனால் அந்த செய்தியின் பின்னணியில் உள்ள வரலாறு நம்மையெல்லாம் பிரமிக்க வைக்கிறது. அட்லாண்டிக் கடலையும் பசிபிக் பெருங்கடலையும் இணைக்கும் 50 மைல் நீளம் கொண்ட பனாமா கால்வாயின் வரலாறு இந்தக் கட்டுரையில் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது.

கரிபியன் பகுதி கண்டுபிடிக்கப் படுதல் :

பதினாராம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாடு புதிய நாடுகள் கண்டுபிடிப்பதில் முன்னோடியாக விளங்கியது. கி.பி. 1513ம் ஆண்டில் வாஸ்கோ நூனிஸ் பலபா (Vasco Nunez Balbao) என்ற ஸ்பானிய கடற்பயணி கரிபியன் பகுதியில் உள்ள பனாமாவை அடைந்தார். அப்பகுதியை ஸ்பானியர்களுக்காக உரிமை கோரினார். பசிபிக் கடல் பகுதியைப் ப்ார்த்த முதல் ஐரோப்பியரும் இவரே ஆவார்.

1924ம் ஆண்டு ஸ்பானிய அரசர் ஐந்தாம் சார்லஸ் இஸ்துமஸ் வழியாக ஒரு கால்வாய் அமைப்பது பற்றி பரிசீலனை செய்தார். அட்லாண்டிக் கடலையும், பசிபிக் பெருங்கடலையும் இணைக்கும் இந்தப் பகுதியின் மீது பல நாடுகள் ஆதிக்கம் கொள்ள முற்பட்டாலும் கால்வாய் அமைப்பது பற்றி 19ம் நூற்றாண்டு வரை எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

பிரான்ஸ் நாட்டின் முயற்சி :

1876ம் ஆண்டு நெப்போலியன் போனபார்ட்டின் மருமக பேரனும்(Grand Nephew) , பிரெஞ்சு கடற்கரை அதிகாரியும் ஆன லூசியன் நெப்போலியன் போன பார்ட் வைஸ் (Lucien Napoleon Bonaparte Wyse) என்பவர் ஒரு குழுவினருடன் பனாமா வந்தடைந்தார். அப்போது பனாமா கொலம்பியா நாட்டின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. பனாமாவில் அமெரிக்கா அமைத்திருந்த ஒரு ரயில் பாதையை ஒட்டி கடல் மட்ட அளவில் கால்வாய் அமைக்கும் திட்டம் பற்றி பரிசீலித்தார். தனது திட்டம் பற்றிய அறிக்கை ஒன்றை அப்போது பிரஞ்சு புவியியல் கழகத்தின் (French Geographical Society) தலைவராக இருந்த பெர்டினாண் டி லெசப்ஸ் (Ferdinand de Lesseps) என்பவரிடம் சமர்ப்பித்தார்.

1879ம் ஆண்டு பெர்டினாண்டு டிலெசப்ஸ் மத்திய அமெரிக்காவில் கால்வாய் அமைக்கும் திட்டம் பற்றி விவாதிக்க பாரிசு புவியியல் கழகக் கூட்டத்தைக் கூட்டினார். அந்தக் கூட்டத்தில் இரண்டு முடிவுகள் எடுக்கப்பட வேண்டியதிருந்தது. கால்வாய் பனாமா அல்லது நிக்காராகுவா ஆகிய இரண்டில் எந்தப் பகுதியில் வெட்டுவது, எந்த வகையிலான (Type) கால்வாய் அமைப்பது என்று முடிவெடுக்க விவாதம் நடந்தது. பனாமாவில் கடல்மட்ட அளவில் (Sea Level) கால்வாய் வெட்ட தீர்மானிக்கப்பட்டது.

பின்னர் இந்த திட்டம் பற்றி பாரிசு சட்டமன்றத்தில் விவாதம் மேற்கொள்ளப்பட்டது. அதிகமான விவாதம் இல்லாமல் இந்த திட்டத்திற்கு அரசு அங்கீகாரம் கிடைத்தது. அதன் பிறகு பெர்டினாண்டு டிலெசப்ஸ் பனாமா கால்வாய் கம்பெனி ஒன்றை அமைத்தார். பின்னர் பனாமா கால்வாய் வெட்டும் திட்டம் பற்றிய செய்தியை அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் பரப்புவதற்காகவும் அதற்கான நிதி திரட்டு வதற்காகவும் பொது விவாதத்திற்கு ஏற்பாடு செய்தார்.

கால்வாய் வெட்டும் பணி ஆரம்பம் :

போதுமான அளவில் நிதி திரட்டிய பின்பு கால்வாய் வெட்டும் பணி ஆரம்பம் ஆனது. 1881ம் ஆண்டு பிப்ரவரி மாதம் பிரெஞ்சு பொறியியல் வல்லுநர்கள் குழு ஒன்று வந்து பணியை ஆரம்பித்தது. பணி ஆரம்ப நிலையில் மெதுவாகவே நடந்தது. மூன்று ஆண்டுகள் பணி நடந்தது. ஆனால் அதற்குள் பல பிரச்சனைகள் தோன்றின.

மண் சரிவு மிகப்பெரிய சவாலாக இருந்தது. மண் தோண்ட தோண்ட சரிவு ஏற்பட்டது. கம்பெனிக்கு பணச்செலவு அதிகரித்தது. பல ஊழல்களும் தலை தூக்கின. நிதி கையாடல் பற்றி பிரெஞ்சு பத்திரிக்கைகள் எழுதின. பெர்டினாண்டு டிலெசப்ஸ் மீது மோசடி புகார் எழுந்தது. மக்களும்,

பத்திரிக்கைகளும் அவரைக் கண்டித்தனர். எனவே 1894ல் கால்வாய் தோண்டும் பணி நிறுத்தப்பட்டது.

பணி நின்று போனதற்கு இரண்டு முக்கியமான காரணங்களைக் கூறலாம். முதலாவது, பெர்டினாண்டு சூயஸ்கால்வாய் கட்டியது போலவே, அதே முறையில் பனாமாய் கால்வாய் வெட்டப்பட வேண்டும் என்று நிர்பந்தித்தது ஆகும். இரண்டாவது, பனாமா பகுதியில் நிலவிய பயங்கரமான மஞ்சள் காய்ச்சல் (Yellow fever) என்ற நோயாகும். இந்த நோயை பெர்டினாண்டு உதாசீனப்படுத்தி விட்டார். எனவே இந்த விஷக்காய்ச்சலுக்கு நூற்றுக்கணக்கான கால்வாய் வெட்டும் தொழிலாளர் பலியாயினர். இது வேலை செய்து வந்த தொழிலாளர்களிடையே பீதியை ஏற்படுத்தியது. பனாமா கம்பெனி நஷ்டத்தில் மூழ்கியது.

**பனாமா கால்வாய் வெட்டும் பணியில் அமெரிக்கா :**

நஷ்டத்தில் இயங்கி வந்த பனாமா கால்வாய் கம்பெனி, அமெரிக்காவின் உதவியை நாடியது. நூறு மில்லியன் டாலர் அமெரிக்காவிடம் கடனாகக் கேட்டது. ஆரம்பத்தில் இந்த பனாமா கால்வாய் பிரச்சனையில் எந்த நாட்டமும், ஈடுபாடும் இல்லாமல் இருந்தது. பனாமாவில் இருந்த அமெரிக்க இருப்புப் பாதை சொந்தக்காரர்கள் கால்வாய் வெட்டி விட்டால் எங்கே தமது இருப்புப் பாதைத் தொழில் பாதிக்கப்பட்டு விடுமோ என்று பயந்து இத்திட்டத்தை எதிர்த்தனர். ஆனால் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியின் விளைவாக அமெரிக்கா நேரடியாக பனாமா கால்வாய் பிரச்சனையில் ஈடுபட்டது.

1898 மார்ச் மாதம் ஸ்பானிய அமெரிக்கப் போர் ஏற்பட்டது. கரிபியன் பகுதியிலுள்ள ஸ்பானியப் பகுதிகளைக் கைப்பற்ற அமெரிக்கா சான்பிரான்ஸிஸ்கோவிலிருந்து ஆரிகான் (Oregon) என்ற கப்பலை அனுப்பியது. அக்கப்பல் 1300 மைல் தூரம் கடந்து 68 நாட்கள் கழித்து ஹார்ன் முனை (Cape Horn) வழியாக போய்ச் சேர்ந்தது. ஆனால் அதற்கு முன்பாகவே போர் முடிந்து விட்டது. இந்த நிகழ்ச்சி கால்வாய் வெட்டப்பட வேண்டியதின் அவசியத்தை அமெரிக்கா உணர வைத்தது. அதன் பிறகு நடவடிக்கைகளில் வேகமாக இறங்கியது அமெரிக்கா.

**பனாமா கால்வாய் வெட்ட அமெரிக்கா செய்து கொண்ட உடன்படிக்கை :**

பிரெஞ்சு நாட்டுக்குச் சொந்தமான பனாமா கால்வாய் கம்பெனியின் பங்குகளையும் உரிமைகளையும் வாங்க அப்போது குடியரசுத் தலைவராக இருந்த தியோடர் ரூசுவெல்ட்டுக்கு அதிகாரம் அளிக்கும் விதமாக அமெரிக்க காங்கிரஸ் ஸ்பூனர் சட்டம் (Spooner Act) ஒன்றை இயற்றியது. அதன்படி பிரெஞ்சு கம்பெனியுடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. கால்வாய் வெட்டும் பகுதியில் ஆறு மைல் அளவுக்கு சுமார் நூறு ஆண்டுகளுக்கு நிர்வாகம் செய்யும் அதிகாரம் அமெரிக்காவுக்கு கொடுக்கும் நகல் உடன்படிக்கை தயார் செய்யப்பட்டது. அதன் படி பத்து மில்லியன் டாலர் மதிப்பில் தங்கமும், வருடக் குத்தகையாக 2,50,000 டாலரும் கொடுக்க முடிவு செய்யப்பட்டது. இந்த உடன்படிக்கையை அமெரிக்க செனட் 1903 மார்ச்சில் அங்கீகரித்தது. ஆனால் அதிகப்பணம் எதிர்பார்த்த கொலம்பியா கோபம் அடைந்து 1903 ஜூன் மாதம் இந்த உடன்படிக்கையை நிராகரித்தது.

உடனே தியோடர் ரூசுவெல்ட் தனது புகழ் பெற்ற பெருந்தடிக் கொள்கையைப் பின்பற்றினார். பனாமாவில் ஏற்கனவே தேசியவாதிகள் கொலம்பியா விடமிருந்து சுதந்திரமடைய கிளர்ச்சி செய்து வந்தனர். இப்போது அமெரிக்கா அவர்களுக்கு ஆதரவு அளித்தது. அதன் விளைவாக பனாமாவில் கிளர்ச்சி அதிகரித்தது. 1903 நவம்பர் 3ம் தேதி பனாமாவில் கொலம்பியா ஆதிக்கத்திற்கெதிராக பெருங்கிளர்ச்சி ஏற்பட்டது. மூன்று நாட்களில் அமெரிக்கா பனாமாவின் சுதந்திரத்தை அங்கீகரித்தது.

1904ம் ஆண்டு பிப்ரவரி மாதம் புதிய பனாமா அரசுடன் அமெரிக்கா ஹேப்பனுவாரிலா உடன்படிக்கை (Hay Bunau - Varilla Treaty) ஒன்று செய்து கொண்டது. அத்துடன் பிரெஞ்சுக் கம்பெனியுடனும் உடன்படிக்கை செய்து கொண்டு அக்கம்பெனியை 40 மில்லியன் டாலர் விலைக்கு வாங்கி விட்டது. அதன் பின்னர் இஸ்துமஸ் கால்வாய் கம்பெனி என்ற பெயரில் அமெரிக்க கம்பெனி ஒன்று அமைக்கப்பட்டு 1904ல் கால்வாய் வெட்டும் பணியை ஆரம்பித்தது.

ஜான் சி.வாக்கர் (Johne Walker) என்பவர் தலைமையில் அமெரிக்க பொறியியலாளர் குழு ஒன்று பனாமா வந்தது. பணி ஆரம்பமானது. ஆனால் பணி ஆரம்பித்த உடனேயே பிரச்சனை ஏற்பட்டது. மஞ்சள் காய்ச்சல் நோய் மறுபடியும் தொழிலாளர்களைத் தாக்கியது. பணி நிறுத்தப்பட்டது. அமெரிக்க மக்களும்

பத்திரிக்கைகளும் கொதிப்படைந்தனர். கண்டனம் செய்தனர். எனவே குடியரசுத் தலைவர் ரூசவெல்ட் கால்வாய் கம்பெனியின் நிர்வாக அமைப்பை மாற்றினார். ஜான் எஸ்.ஸ்டீவன்ஸ் (John S. Stevens) என்பவர் தலைமையில் புதிய பொறியியலாளர் குழு அமைக்கப்பட்டது.

பிரச்சனைக்குக் காரணமாக இருந்த மஞ்சள் காய்ச்சலை ஒழித்துக் கட்ட வில்லியம் ஜார்ஜ் என்பவர் சுகாதார அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அவர் 1906ம் ஆண்டுக்குள் மஞ்சள் காய்ச்சலை ஒழித்தார். அமெரிக்க அரசு அதிகளவில் நிதி கொடுத்தது. 1906 ஜூலை 21 முதல் பணி வேகமாக நடந்தது. ஆறாயிரம் பேர் 1908 முதல் 1913ம் ஆண்டு வரை தொடர்ந்து பணியாற்றினர். பணி முடிவடைந்தது. 1913 அக்டோபர் 10ம் தேதி கால்வாயின் இருபக்கமும் கட்டப்பட்ட 85 அடி உயர தடை உடைக்கப்பட்டது. அட்லாண்டிக்கடலும், பசிபிக்கடலும் இணைந்தது!

1914 ஆகஸ்ட் 15ம் தேதி உயர் அதிகாரிகள், பொறியியல் வல்லுநர்கள், பணியாளர்கள், பத்திரிக்கையாசிரியர்கள் ஆகியோரின் முன்னிலையில் அன்கான் (Ancon) என்ற பெயருடைய முதலாவது கப்பல் பனாமா கால்வாயில் மக்களின் ஆரவாரத்துடன் புறப்பட்டது. லிமான் வளைகுடாவிலிருந்து பனாமா வளைகுடா வரை செல்ல அக்கப்பல் பத்து மணி நேரமே எடுத்துக் கொண்டது. இது வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியாகும். ஒரு நூற்றாண்டு காலமாக இருந்த கனவு நிறைவேறியது.

**பனாமா கால்வாய் பனாமா நாட்டிடம் ஒப்படைக்கப்படுதல் :**

ஐம்பது மைல் நீளம் கொண்ட இந்த பனாமா கால்வாய் வெட்டி முடிக்க அப்போது 1,408 கோடி ரூபாய் செலவானது. இது அட்லாண்டிக் கடலையும், பசிபிக் பெருங்கடலையும் இணைக்கும் கடல் வழியாகும். அமெரிக்காவின் கிழக்கு கடற்கரை நகரமான நியூயார்க்கிலிருந்து மேற்கு கடற்கரை நகரமான சான்பிரான்சிஸ்கோ செல்வதற்கு இது ஒரு குறுக்கு கடல் வழிப்பாதை ஆகும். பனாமாவுடன் அமெரிக்கா செய்து கொண்ட உடன்படிக்கைபடி கால்வாயை ஒட்டி பத்து மைல் நிலப்பகுதி அமெரிக்கா வசமானது. இந்த நிலப்பகுதிக்கும் பனாமாவுக்கும் எந்த தொடர்பும் கிடையாது.

கால்வாய் நிர்வாகமும், ராணுவமும் கோடிக் கணக்கான ரூபாயை பனாமாவில் கொட்டியது. இதனால் பனாமாவின் பொருளாதாரம் செழிப்படைந்தது. இருந்தாலும் பனாமா மக்களுக்கு தங்கள் நாட்டின் ஒரு பகுதி அன்னிய ஆதிக்கத்தில் இருப்பது மனக்கசப்பைத் தந்தது. இது 1960ம் ஆண்டுகளில் போராட்டமாக வெடித்தது. கால்வாயைப் பாதுகாப்பதற்குச் சிறந்த வழி அதனை பனாமாவிடம் ஒப்படைப்பதுதான் என்று சிந்தனை அமெரிக்காவுக்கு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து 1977ம் ஆண்டு அமெரிக்கா-பனாமா நாடுகளுக்கிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி 1999ம் ஆண்டு டிசம்பர் 31ம் தேதி பனாமா கால்வாயை பனாமா நாட்டிடம் ஒப்படைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் பனாமா அதிபர் டோரி ஜோஸ் என்பவரும் அமெரிக்க குடியரசுத் தலைவர் ஜிம்மி கார்ட்டரும் கையெழுத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி 1999 டிசம்பர் மாதம் பனாமா கால்வாயை ஒப்படைக்கும் விழா பனாமாவில் நடைபெற்றது. அதில் பனாமா கால்வாயின் அதிகாரங்களை பனாமா நாட்டிற்கே வழங்கியது அமெரிக்கா. பனாமா பகுதியிலிருந்த தனது இராணுவத்தையும் விலக்கிக் கொண்டது. இதனைத் தொடர்ந்து பனாமா ஒரு முழுமையான சுதந்திர நாடாக மாறியது. பனாமா கால்வாய் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தொழில் நுட்ப வளர்ச்சியின் அழியா சின்னமாகும்.

***

**"You can do it ;**
**If you believe**
**You can"**

***- Napolean Hill***

**"Just remember,**
**What you have read, digest it,**
**Make it an integral part in your life"**

***- Mahatma Gandhi***

## SPORTS



Hockey "B" Zone Winners



Captain's Killing Action



Volley Ball Winners "B" Zone with the Trophy

## YOUTH RED CROSS




Golden Jubilee - Geneva Conventions of ICRC




First Aid Instruction



Blood Donation - Day

# பெரியோர் வரலாறு – ஒரு வழிகாட்டி

- V. லட்சுமி நரசிம்ம ராகவன், M.Sc., M.Phil., கணிதத்துறைத் தலைவர்

ஒருவன் நல்வாழ்வு வாழ வேண்டும் எனில் அவனுக்கு கண்டிப்பாக அனுபவ அறிவு வேண்டும். எல்லா அனுபவங்களையும் சொந்த வாழ்விலிருந்தே பெறுவது என்பது இயலாத காரியம். ஆகையால் நாம் பெரியோர்களது செயற்கரிய வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொண்டோம் என்றால், அவர்கள் வாழ்க்கையில் எவ்வாறு கஷ்டங்களையும், சிக்கல்களையும், தடங்கல்களையும் எதிர் கொண்டார்கள் என்று நாமும் அறிந்து கொள்ளலாம். அதுவே வாழ்க்கையில் நாம் எதிர் கொள்ள இருக்கும் சிக்கல்களை அகற்றிக் கொள்ளும் அறிவை உண்டாக்குகிறது.

**பெரியோர் என்பவர் யாவர் ?**

நாம் பெரியோர்களது வரலாற்றைப் படிக்கும் போது எப்படிப்பட்டவர்களது வரலாற்றைப் படிக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். எவர் ஒருவர் அறிவு, ஒழுக்கம், தன்னடக்கம், திறமை போன்ற பல குணங்களில் உயர்ந்தவர்களாக இருக்கிறாரோ அவரே பெரியவர் ஆவார். அப்படிப்பட்ட பெரியவர்கள் கடந்த நூற்றாண்டில் ஆபிரகாம்லிங்கன், ஐன்ஸ்டின், காந்திஜி, பட்டேல், நேரு, இராஜாஜி, அண்ணா, அன்னை தெரஸா போன்ற பலர் இருந்திருக்கிறார்கள். இந்த நூற்றாண்டில் அப்துல் கலாம் போன்ற சிலர் இருக்கிறார்கள். இந்தப் பெரியவர்களில் சிலர் அறிவிலும், ஆற்றலிலும், அலுவலிலும் பெரியவர்களாக இருந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பெரியவர்களது வாழ்க்கைச் சரித்திரங்கள், அவர்கள் எவ்வாறு சிரமப்பட்டு முன்னேறி வந்தார்கள் என்று நாம் அறிந்து கொள்ள மிகவும் உதவுகிறது.

ஆகையால் நாம் நல்லவர்களின் (பெரியோர்களின்) வரலாறுகளை – நன்மை பயக்கும் வரலாறுகளை படித்துப் பயன் அடைய வேண்டும். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பெரியோர்களின் வரலாறுகளையே – துணைப் பாடங்களாக வைத்தால் மாணவர்கள் பிற்காலத்தில் நல்ல ஒரு அறிவுள்ளவனாகவும், பண்புள்ளவனாகவும், திறமையுள்ளவனாகவும், அடக்கம் உள்ளவனாகவும் வருவார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

***

## சிந்தனைக்குச் சில திருக்குறள்கள்

- அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
  என்னுடைய ரேனும் இலர்.
- நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
  அன்றே மறப்பது நன்று.
- அரம் போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்
  மக்கட்பண் பில்லா தவர்.
- பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
  கருமமே கட்டளைக் கல்.
- எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
  செல்வர்க்கே செல்வம் தகைத்து.
- ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
  உயிரினும் ஓம்பப் படும்.
- கற்க கசடறக் கற்பவை கற்றபின்
  நிற்க அதற்குத் தக.



◇ குற்றம் குறைகளை நீக்கிக் கொள்வதே நமக்கு ஏற்படக்கூடிய பெரிய அதிர்ஷ்டம்.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"



மா. மாடசாமி,
II B.Com., (R)



M. ALAGU RAJA,
I M.Com.,


விருதுநகர் மாவட்டம்




FEB 26
ORGANISED BY: DEPT O
RAJAPALAYAM RAJUS




RAJUS' COLLEGE

